பாவனைக்குச் சிறந்தது
டொவர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



...லர் கோர்ப்பரேஷன்
...டெட் ... கொழும்பு

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

EELANADU
மலர் 11
தபால்பெட்டி எண்: 49 இதழ்: 27
போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி
யாழ்ப்பாணம் மாசி 26 ஹிஜ்: 19 ஞாயிற்றுக்கிழமை [9-3-69]

பிறின்ஸ் ஸ்ருடியோ
திறப்புவிழா அழைப்பு
இன்று காலை 10 மணியளவில்
யாழ். மாநகரசபை முதல் பெண் அங்கத்தவர்
திருமதி அந்தோனியா சாமிநாதர் அவர்கள்
மேற்படி ஸ்தாபனத்தை ஆரம்பித்துவைப்பார்.
அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன்.
50, பிரதானவீதி, இங்ஙனம்
'மச்சாடோகட்டிடம்' R.C.மரியராசா(பபி)
யாழ்ப்பாணம். 1217

## சுப்பிரமணியம் ராஜினமா

### காங்கிரஸ் செயற்குழுவிலிருந்து

புதுடில்லி, மார்ச் 8

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் காங்கிரஸ் சொற்கமிட்டியிலிருந்து ராஜினமாச் செய்துள்ளார், இன்று அவர் தனது ராஜினமாக் கடிதத்தைச்சமர்ப்பித்தார்.

ராஜினமாவை வாபஸ் பெறும்படி காங்கிரஸ் செயற்கமிட்டி இவரைக் கேட்டுக்கொண்டுள்ளது.

லண்டன், மார்ச் 8

ஸ்ரேலுக்கும், ஐக்கிய அரபுக் குடியரசுக்குமிடையில், இன்று காலை சூயஸ் கால்வாய் பகுதியில் மோதல் இடம்பெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# சட்ட விரோத குடியேற்றம்

# வடக்கில் ஒரு இயக்கம் செயல்படுகிறதாம்

## ஐ. ஜி. பி. சொல்கிருர்

கொழும்பு, ஞாயிறு

வடபகுதியில் சட்ட விரோத குடியேற்றத்துக்கு உதவும் ஒரு இயக்கம் இயங்கிவருவதாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார்.

இவ்வித இயக்கத்தைச் சேர்ந்த ஒரு நபர் கைது செய்யப்பட்டு ஐந்து வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டதாகவும் இன்ஸ்பெக்டர் ஜெனரல் எடுத்துக்கூறினுர்.

சட்டவிரோத குடியேற்றம், கள்ளக்கடத்தல் ஆகியவற்றைத் தடுக்க பொதுமக்கள் தமது ஒத்துழைப்பைத் தரவேண்டுமென வேண்டுகோள் விடுக்கையிலேயே ஐ. ஜி. பி. மேற்படி தகவலை வெளியிட்டார்.

ஐ. ஜி. பி. இதுசம்பந்தமாக மேலும் தெரிவித்துள்ளதாவது:

சட்ட விரோத குடியேற்றம் வடக்கிலும் கிழக்கிலும் நடைபெற்று வருகிறது. பொலிஸார் இது பற்றி வெகுவிழிப்புடன் இருந்து கண்காணித்து வருகிருர்கள்.

கச்சதீவு பெருநாள் சமீபித்துவிட்டதால் சட்ட விரோத குடியேற்றம் சம்பந்தமாக பொலிஸாருக்கு பொதுமக்கள் தமது ஒத்துழைப்பை மேலும் அளிக்கவேண்டும்.

இது விஷயத்தில் பாரத பொலிஸார் இலங்கை பொலிஸாருக்கு தமது ஒத்துழைப்பைத் தருவதாக உறுதியளித்துள்ளார்கள்.

## வரி உயர்வு மதிப்பீட்டை யாழ். மாநகரசபை ஏற்றது

யாழ்ப்பாணம், ஞாயிறு

''விலைமதிப்பீட்டாளர்களால் மதிப்பிடப்பட்ட புதிய வரி மதிப்பீடு சரியில்லாதது என்பதை இந்தச் சபையில் நான் முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இந்த மதிப்பீடு செய்யப்பட்டபோது இங்கு சபை இருக்கவில்லை. இருந்திருந்தால் நாம் வாதாடி இதனை நிறுத்தியிருப்போம். அரசாங்கத்தின் தரகர்களான விசேஷ ஆணையாளர்கள் இந்த விஷயத்தில் எங்களை ஏமாற்றிவிட்டார்கள். இதை நான் ஒருபோதும் ஆதரிக்க மாட்டேன்.''

புதிய வரி மதிப்பீடு சம்பந்தமாக பிரதம மதிப்பீட்டாளருக்கு கொடுக்கவேண்டிய மிகுதிப் பணத்தைக் கொடுப்பதா இல்லையா பற்றிய விவாதத்தில் பேசிய யாழ். மாநகர துணைமுதல்வர் திரு. ஆ. துரைராஜசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

நகரமுதல்வர் திரு. எஸ். நாகராஜா தலைமையில் இதுபற்றி ஆராய்ந்து முடிவெடுப்பதற்காக சபையின் கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை விசேஷமாகக் கூட்டப்பட்டது. பஜார் வட்டார அங்கத்தவரான திரு. கே. வி. தெய்வேந்திரனைத் தவிர மிகுதி 22 அங்கத்தவர்களும் சமுகம் கொடுத்திருந்தனர்.

சபை முதல்வர் திரு. எஸ் நாகராசாவால் இதுபற்றிக் கொடுக்கப்பட்ட விளக்கத்தைத் தொடர்ந்து வாக்களிப்பு நடைபெற்றது.

சாதகமாக வாக்களித்தோர்:

எஸ். நாகராசா (முதல்வர் என். ரி. செல்வத்துரை ஜெ வீரசிங்கம், ரி: எஸ். துரைராஜா, வி. சிவசுப்பிரமணியம், ரி. கே. ராஜரத்தினம் டாக்டர் ஏபிரகாம், இ. அன்ரனி, ஏ. ரி. போல்ராஜ் திருமதி அ. சுவாமிநாதர், என் அந்தோனியாப்பிள்ளை

(4:ம் பக்கம் பார்க்க)

## பாக்.-எம். சி. சி. கிரிக்கெட் ஆட்டம்

### கைவிடப்பட்டது

கராச்சி, மார்ச் 8

கராச்சியில் நடைபெற்று வந்த இங்கிலாந்துக்கு எம். சி. சி. கிரிக்கெட் கோஷ்டிக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையிலான 3-வது கிரிக்கெட் டெஸ்ட் இன்று இடைவேளைக்குச் சற்றுமுன்னதாக கைவிடப்பட்டது.

திடீரென ஆர்ப்பாட்டக்காரர்கள் மைதானத்துக்குள் நுழைந்து, ஆட்டத்தை நிறுத்தும்படி கோஷமிட்டனர்.

பல்வேறு இடங்களில் வேலைநிறுத்தம் நடைபெற்றுக்கொண்டிருப்பதால், தொடர்ந்து கிரிக்கெட் ஆட்டத்தை நடாத்தவேண்டாமெனக் கேட்டுக்கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து ஆட்டம் கைவிடப்பட்டது.

### சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

## ரஷ்ய தலைநகருக்குள் வந்து குவிகின்றனர்

மாஸ்கோ, மார்ச், 8

சோவியத் ரஷ்யாவின் தலைநகரில் நடைபெறும் மாபெரும்சீனஎதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஆயிரக்கணக்கானேர் மாஸ்கோ நகருக்குள் வந்து குவிந்தவண்ணமிருக்கின்றனர்.

இன்று 2-வது நாளாக சீன தூதரகத்துக்கு முன்னல் நடந்த மாபெரும் ஆர்ப்பாட்டத்தில், சீனத் தூதரக யன்னல்கள் நொருக்கப்பட்டன. 50 ஆயிரம்பேர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

லொறிகள், கார்கள், பஸ்களில்பல பகுதிகளிலிருந்தும் மக்கள் தலைநகருக்கு வந்தபடியே இருக்கின்றனர்.

தலைநகரில் வான்களிலும், கார்களிலும் ஒலிபெருக்கிகள் சீனவுக்கு எதிரான கோஷங்களை அலறிக்கொண்டிருக்கின்றன.

சீனத்தூதரகத்துக்கு முன்னல் நடக்கும் மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் நாளை ஒரு லட்சம்பேர் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

## கி. ச. தலைவர்கள் மகாநாடு

குரும்பசிட்டி, சனி

யாழ்ப்பாண அரசாங்க செயலக மண்டபத்தில் அடுத்த மாதம் 3-ம்திகதி காலை 10 மணிக்கு உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. ஏ. ஏ. யோசேப் தலைமையில் கிராமசபை தலைவர்கள் கால் வருட மகாநாட்டின் முதற் கூட்டம் நடைபெறவிருக்கின்றது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும் இதில் கலந்து கொள்வார். இம்மகாநாட்டில் கலந்து கொள்ளுமாறு சகல உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

## இன்று வரவேற்பு

சுன்னகம், ஞாயிறு

சுன்னகம் பட்டின சபையின் உதவியுடன் யாழ். உதவி மேற்றிராணியார் பிஷப் எல். ஜி. அன்ரனிக்கு இன்று மாலை வரவேற்பு விழா ஒன்று நடத்தப்படவிருக்கிறது. சுன்னகம்

## மட்டுவிலில் ஆலய பிரவேச முயற்சி

### சமரக்கொடியும் வருவாராம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மட்டுவில் பன்றித்தலைச்சி ... மட்டுவிலில் இம் ... 17-ந் திகதி நடைபெறவிருக்கும் ஆலயப் பிர...

மல்லவாராட்சி ஆகியோர் இம்மாதம் 17-ம் திகதி யாழ்ப்பாணம் வருகிருர்களென்றும் அவர் தெரிவித்தார்.

விடுவார்களென மட்டுவில் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

வழக்கம்போல் இவ்வருடமும், கோயில் விழா நடைபெறுமென்றும் கோயில் பணிகளை செய்வதற்காக தொண்டர் படையொன்று உருவாக்கப்படவிருப்பதாகவும் கோயில் உபயகாரர் ஒருவர் தெரிவித்தார்.

இம்மாதம் 12-ம் தேதி யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பீட்...

## இன்று பாண்டிச்சேரி இடைக்கால தேர்தல்

சென்னை, மார்ச் 8 மாக 30 தொகுதிகள் இருக்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தமாக பிரதம மதிப்பீட்டாளருக்கு கொடுக்கவேண்டிய மிகுதிப் பணத்தைக் கொடுப்பதா இல்லையா பற்றிய விவாதத்தில் பேசிய யாழ். மாநகர துணைமுதல்வர் திரு. ஆ. துரைராஜசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

என். ரி. செல்வத்துரை, ஜே வீரசிங்கம், ரி: எஸ். துரைராஜா, வி. சிவசுப்பிரமணியம், ரி. கே. ராஜரத்தினம், டாக்டர் ஏபிரகாம், இடு அன்ரனி, ஏ. ரி. போல்ராஜ், திருமதி அ, சுவாமிநாதர், என் அந்தோனியாப்பிள்ளை

(4:ம் பக்கம் பார்க்க)

## "ஆங்கிலப்பற்று மிகுந்தகாலத்தில் தமிழ் உணர்வை ஏற்படுத்தியவர்"

### ஆசுகவிநினைவுவிழாவில் கவிஞர் கந்தவனம்

குரும்பசிட்டி, சனி

"ஆங்கிலப் பற்று மிகுந்து தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்ட காலத்தில் மக்களிடையே சுதேச நாட்டியம் என்ற பத்திரிகையை வெளியிட்டு தமிழ் உணர்ச்சியை நன்கு ஏற்படுத்தியவர் ஆசுகவி வேலுப்பிள்ளையாகும். இவர் எழுதிய 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' என்ற நூலின் இரண்டாம் பதிப்பை வெளியிடுதல் நமது கடமையாகும். யாழ். இலக்கிய வட்டம் நம்மத்தியில் வாழ்ந்த, வாழுகின்ற புலவர்கள், அறிஞர்களின் மேன்மையும் புலமையையும் பலரும் அறிய வைத்தலை முக்கிய கடமையாகக் கொண்டுள்ளது: ஆசுகவி மதிநுட்பம், துணிச்சல், தமிழ் தொண்டு நிறைந்த பெரும்புலவர்."

வயாவிளான் பலாலி தெற்கு வாலிபர்சங்கச் சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்று யாழ். இலக்கிய வட்டம் நடாத்திய ஆசுகவி வேலுப்பிள்ளை நினைவுவிழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் யாழ். இலக்கியவட்டத்தலைவர் கவிஞர் வி. கந்தவனம் மேற்கண்டவாறு கூறினர்.

இரசிகமணி கனக. செந்திநாதன் பேசுகையில் தமிழ் இலக்கியத்தில் வரலாற்று நூல்கள் வெளிவந்தமை குறைவு. சி. வை. தாமோதரம்பிள்ளை, கணேசையா, வேலுப்பிள்ளை போன்றஈழத்துத் தமிழ் அறிஞர்களின் வரலாறுகளை நூல்வடிவில் வெளியிட நமது எழுத்தாளர்கள் முன்வருதல் வேண்டும் எனத் தெரிவித்தார்.

நியாயதுரந்தரர் வ இராசநாயகம் பேசுகையில் தாம் வரலாற்று நூல் ஒன்றினை எழுதி முடித்துள்ளதாகவும் சமீபத்தில் வெளியிடப்படும் எனவும் குறிப்பிட்டார்.

## இன்று பாண்டிச்சேரி இடைக்கால தேர்தல்

சென்னை, மார்ச் 8

பாண்டிச்சேரியில் நாளைய தினம் பொதுத்தேர்தல் நடைபெறுகின்றது. கடந்த வருடம் செப்டம்பர் மாதம் இப்பகுதியில் சட்டசபை கலைக்கப்பட்டதை யொட்டி பாண்டிச்சேரியில் இடைக்கால வேலைநிறுத்தம் நடைபெறுகின்றது. பாண்டிச்சேரி, காரைக்கால், மாகே ஆகிய எல்லைப் பகுதிகளிலுமாக 30 தொகுதிகள் இருக்கின்றன. எல்லாமாக 76 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்கள். 17 இடங்களில் நேரடிப்போட்டிகள் நடைபெறுகின்றன. காங்கிரஸ் கட்சி 30 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றது. தி. மு. க. 19 தொகுதிகளிலும், 20 சுயேச்சைகளும் போட்டியிடுகின்றன. சி. பி. ஐ. 7 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

## 600 பேர் மூழ்கினர்

### 60 ஆயிரம் பேர் வீடிழந்தனர்

ஜகார்த்தா, மார்ச் 8

இந்தோனேஷியாவில் சமீபத்தில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பில், 600 பேர் மூழ்கிவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

60 ஆயிரம்பேர் வீடிழந்து நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

மீட்புவேலைகளிலும், நிர்க்கதிக்குள்ளானவர்களுக்கு உதவி அளிப்பதிலும் இந்தோனேஷிய அரசாங்கம் துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

### சமரக்கொடியும் வருவாராம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன்கோவிலில் இம்மாதம் 17-ந் திகதி நடைபெறவிருக்கும் ஆலயப் பிரவேசத்தில், புரட்சிகர சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த கோஷ்டியொன்றும் கலந்துகொள்ளவிருப்பதாக, புரட்சிகர சமசமாஜக்கட்சி யாழ். கிளை உறுப்பினரான திரு, வி. எம். பொன்னையா தெரிவித்தார்.

திரு. பொன்னையா மேலும் கூறியதாவது: சிறுபான்மைத்தமிழர்களைக்கொண்ட இக்கோஷ்டி, சாவகச்சேரியிலிருந்து ஊர்வலமாகச் செல்லுமென்றும், இக்கோஷ்டியில் பெண்களும் இருப்பார்களென்றும் அவர் தெரிவித்தார்.

புரட்சிகர சமசமாஜக் கட்சித் தலைவர் திரு. எட்மண்ட் சமரக்கொடி, திரு. மல்லவாராட்சி ஆகியோர் இம்மாதம் 17-ம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார்களென்றும் அவர் தெரிவித்தார்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க அமைப்பாளர் திரு. கே. டானியல், மட்டுவிலில் நடைபெறவிருக்கும் ஆலயப்பிரவேசஇயக்கத்தில் அதிகமாக பெண்களும் வயோதிபர்களும் கலந்துகொள்வார்களென்றும், ஒவ்வொரு திங்கட்கிழமையும், ஆலயப்பிரவேசம் நடைபெறவிருப்பதாகவும் தெரிவித்தார்.

சமாதான முறையில் பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஆலயப்பிரவேசக்குழு முன்வந்திருக்கிறது. ஆலயப் பிரவேசக்குழு அம்பாளை தரிசிக்கவரும் சைவர்களை அன்புடன் உள்ளே அழைத்துச் சென்று அருள்பெற வழி பெறுமென்றும் கோயில் பணிகளை செய்வதற்காக தொண்டர் படையொன்று உருவாக்கப்படவிருப்பதாகவும் கோயில் உபயகாரர் ஒருவர் தெரிவித்தார்.

இம்மாதம் 12-ம் தேதி யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ் ஆலயப்பிரவேசம்சம்பந்தமாகஒருமகாநாட்டைக் கூட்டுகிறார். கோயில் நிர்வாகிகளும் ஆலயப்பிரவேச இயக்கத்தினரும், அரசாங்க அதிபரைத் தனித்தனியே சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்துவார்களெனத் தெரியவருகிறது.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்திற்கும், திரு. எட்மன்சமரக்கொடி போன்றோருக்கும் எவ்வித உறவுமில்லையென்றும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க இணைச்செயலாளர்களான திருவாளர்கள் எஸ். கணேசன், எம். சின்னையா ஆகியோர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### ... வரவேற்பு

சுன்னாகம், ஞாயிறு

சுன்னாகம் பட்டின சபையின் உதவியுடன் யாழ். உதவி மேற்றிராணியார் பிஷப் எல். ஜி. அன்ரனிக்கு இன்று மாலை வரவேற்பு விழா ஒன்று நடத்தப்படவிருக்கிறது. சுன்னாகம் அர்ச் அந்தோனியார் தேவாலயத்தில் காலை உறுதிப் பூசுதல் நடத்தியதும் மாலையில் சுன்னாகம் சந்தை மைதானத்திலிருந்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார்.

### கிணற்றில் விழுந்தார்

உருத்திரபுரம், சனி

உருத்திரபுரம் 10-ம் வாய்க்காலைச் சேர்ந்த மாணிக்கம் என்பவரின் மகன் தண்ணீர் அள்ளும்போது தவறிக் கிணற்றில் விழுந்து மரணமானார். தாயும் தகப்பனும் வயலுக்கு நெல்லு வெட்ட போய்விட்ட சமயத்தில் இவர் தவறுதலாக விழுந்து மரணமாகியுள்ளாரென்று விசாரணையில்தெரியவந்தது.

## புனிதவதி கொலை வழக்கு

# "குளித்தபின் துவாய் கட்டுவது தமிழரின் வழக்கமல்லவா?"

—ஜூரிசபைத் தலைவர்

# "எதிரி குளிக்கப்போவதாகச் சொல்லவில்லை"

—சாட்சி

யாப்பாணம், ஞாயிறு

'நீங்கள் அறையில் படித்துக் கொண்டிருந்த போது எதிரி சயிக்கிலில் வந்தது எப்படித்தெரிந்தது என்று ஜூரிசபைத்தலைவர் கேட்டபோது நாய்குரைத்த படியால் வெளியில் வந்துபார்த்தோம் என்று சாட்சியமளித்த சிவராசா கூறினர்

புனிதவதி கொலைவழக்கு நேற்றுமுன்தினம்வட பகுதி அசைஸ் கோட்டில் நீதியரசர் வி.ரி. பண்டிதகுணவர்த்தன முன்னிலையில் நான்காவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் தொல்புரத்தில் 67ம் ஆண்டு அக்டோபர் 4ந் திகதி புனிதவதியைக்கொலைசெய்ததாக கிருஷ்ணசாமி என்பவர் மீது குற்றம்சாட்டப் பட்டுள்ளது

ஜூரிசபைத் தலைவரின் கேள்விகளுக்கு சாட்சியமளித்த சிவராசா பதில் கூறினார்:

ஜூரி: நீங்கள் படித்துக் கொண்டிருந்தபோது எதிரி சயிக்கிலில் வந்தது எப்படி தெரியும்? நாய்குரைத்தபடியால் வெளியில்போய்ப்பார்த்தோம்.

ஜூரி: அறைக்கு எல்லாரும் வந்தீர்கள்? ஆம்.

ஜூரி: நீர்அறையில் இருந்தபோது எதிரி வந்ததாக இங்கு கூறினீர்? நான் அறைக்கு முதலில் வந்துவிட்டேன்.

ஜூரி: முன்னர் வராத எதிரி அன்று வந்து வாளியும் துவாயும் எடுத்துக் கொண்டு போனரா?- அவரை தெரியும்.

ஜூரி: நெருங்கிய சினேகிதரா?- ஆம்.

ஜூரி: வரதராசா படித்துக்கொண்டிருந்தார்?- ஆம்.

ஜூரி: சேர்ந்து படித்தீர்கள்?- ஆம்.

ஜூரி: நல்ல சிநேகிதமானதால் சேர்ந்து படித்தீர்?- ஆம்.

ஜூரி: வரதராசாவிற்கு எதிரி சொன்னதை கூறினீரா?- இல்லை.

ஜூரி: எதிரி வாளி, துவாய் கேட்கும்போது வித்தியாசமாக இருந்ததா?-இல்லை.

ஜூரி: தமிழர்கள்குளித்தபின் துவாய் கட்டி வாறது வழக்கமில்லையா?- எதிரி குளிக்கப்போவதாகசொல்லவில்லை மலகூடத்திற்கு என்றார்.

ஜூரி: குளித்துவிட்டு வந்தாரா?- ஆம்.

ஜூரி: குளித்து விட்டு வரும் போது துவாய் கட்டி வருவது ஆச்சரியப்படக் கூடியது இல்லை?- ஆம்

ஜூரி: எதிரி இரவு 10.30 மணிக்கு வந்ததாக கூறினீரா?- ஆம்

ஜூரி: நீரும் வரதராசாவும் இருந்தீர்கள்.

ஜூரி: வரதராசா தோற்றத்தில் உம்மைப் போன்றவரா?- என்னிலும் உயரமானவர்.

ஜூரி: நீரும் வரதராசாவும் கொலையைப்பற்றி உடனே பொலிசாருக்குஅறிவிக்க யோசிக்கவில்லையா?- எதிரி இருந்தபடியால்சொல்லவில்லை.

ஜூரி: நீர் இரவில் வெளியில்போக பயமாக இருந்தபடியால் போகவில்லை என்றீர். மறுநாள் அதிகாலைஎப்படி தனிய உமது வீட்டிற்கு பயமில்லாமல் போனீர்? விடிந்துவிட்டது,

ஜூரி: உமது வீட்டிற்கு போனீர்? ஆம்

ஜூரி: அம்மா சகோதரி இருந்தார்கள்? ஆம்.

ஜூரி: பிள்ளைகள் தகப்பனுடன் கதைப்பதிலும் பார்க்க தாயாருடன்தான் கதைப்பார்கள்?- ஆம்

இன்ஸ்பெக்டர் டயஸ் சாட்சியமளித்தார். விசாரணை இன்றுகாலை தொடர்ந்துநடைபெறும்.

### நியமனம்

வவுனியா, சனி

வவுனியாஅரசினர்வைத்திய சாலையின் உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராக சமாதான நீதிபதி ஜனாப் எஸ். எம். யூசுப் சுகாதார அமைச்சினுல் நியமிக்கப்பட்டுள்ளார்.

## நஞ்சூட்டி சிறுவன் கொலை செய்யப்பட்டானும்

வவனியா, சனி

எட்டுவயதுச் சிறுவனொருவன் நஞ்சூட்டிக் கொலை செய்யப்பட்டானும், வவனியா குடியேற்றத் திட்டமொன்றைச் சேர்ந்த சிவம் என்பவரின் மகனை மாணிக்கவாசகர் என்ற சிறுவனின் மரணவிசாரணையின் போதே மேற்படி திடுக்கிடும் தகவல் வெளியானது. பிரேதபரிசோதனை நடத்திய டாக்டர் நஞ்சருந்தியதால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்,

இதனைத்தொடர்ந்துதிடீர் மரணவிசாரணை அதிகாரி பொலிஸாரை இதுசம்பந்தமாகத் தொடர்ந்து புலன் விசாரணை செய்யும்படி உத்தரவிட்டார்.

இதுசம்பந்தமாக ரத்தினம் என்பவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

யாழ் பாணம், ஞாயிறு

யாழ். மாவட்ட துணை மேற்றிராணியார் அதி-வந்தனைக்குரிய ஆண்டகை எல், ஆர். அன்ரனிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் தேவாலயத்தில் இன்று மாலை பொதுவரவேற்பொன்று அளிக்கப்படவிருக்கின்றது.

## மாதசம்பளத்தில் கடமைபார்த்த டாக்டர் நாள்சம்பளஊழியரானர்

### ஒரு பிரதம தாதிக்கும் இந்த கதி

யாழ்ப்பாணம், ஞாயிறு

மாத அடிப்படைச் சம்பளத்தில் கடமையாற்றி வந்த யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த பல் சிகிச்சை டாக்டர் ஒருவரும், பிரதம தாதி ஒருவரும் இம்மாதம் 1-ம் திகதியிலிருந்து நாள் சம்பள ஊழியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிங்களப் பரீட்சைக்குத் தோற்றவில்லை யெனக் காரணம் காட்டி இம் மாதம் முதலாம் திகதியிலிருந்து வேலையை இழப்பதாக தெரிவிக்கப்பட்ட டாக்டர் சோம சுந்தரபாரதியும், பிரதம தாதி செல்வி நவரத்தினமுமே நாள் சம்பள ஊழியர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களாவார்.

தமது வேலை நீக்கத்தை ஆட்சேபித்து இவர்கள் இருவரும் அப்பீல் செய்திருப்பதால், அப்பீல் தீர்ப்பு வழங்கப்படும் வரை இவர்கள் இருவரையும் நாள் சம்பள அடிப்படையில் வேலைக்கு அமர்த்துமாறு கிடைக்கப்பட்ட மேலிட உத்தரவைத் தொடர்ந்தே இவர்கள் கடமையாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரி வைத்திய சுப்பிரிண்டன் தெரிவித்தார்.

(கா. நி)

### பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு

கொழும்பு, சனி

இவ்ஆண்டு இறுதிக்குள் 500 பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படவிருக்கின்றது. இவர்கள் தமது சொந்த இடங்களிலேயே வேலையில் அமர்த்தப்படுவர்.

### வடபகுதி மாணவர் அதிருப்தி

உடுப்பிட்டி, சனி

இவ் வருடம் முதல் தட்டெழுத்தாளர் பரீட்சை கொழும்பிலேயே நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளதால் வடபகுதி மாணவர்கள் மிகவும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இப்பரீட்சையைக் கொழும்பில் நடாத்துவதற்கு யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் மன்றம் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது. கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை தட்டெழுத்தாளர் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்தும்படி கோரி உள்ளூராட்சி அமைச்சருக்குத் தந்தி அனுப்பி வைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

பரியாரி கமம் 6 ஏக்கர் எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை-சிதம்பரப்பிள்ளையின் ஆதனம் தெற்கு ரோட்டு மேற்கும் வடக்கும் குளம் மாந்தை தெற்கு மாந்தை டிவிஷன், மன்னார் டிஸ்திறிக், வடமாகாணம். நல்ல விளைச்சலான காணி உடன் விற்க விரும்புகிறேன். நேரே தொடர்பு கொள்ளவும். S. S. பொன்னையா, வட்டுக்கிழக்கு, வட்டுக்கோட்டை. 735

யாழ்ப்பாணத்தில் கார்கள் வாங்கவும், விற்கவும், மாற்றுவதற்கும், ட்றேட் அன்ட் ட்ருன்ஸ்போர்ட் கம்பனி லிமிட்டட் ஒவ்வொரு போயா முன்தினத்திலும், ஒழுங்கு செய்திருக்கின்றது. பெப்ரவரி 23ல் ஆரம்பம். தொலைபேசி எண் 375. 742

கார்:

மிகவும் நல்ல நிலைமையில் உள்ள EY 6805 கொன்சல் கார் விற்பனைக்கு உண்டு. எந்நேரமும் பார்வையிடலாம். விஜயரட்ணம் (பிரசவ ஆஸ்பத்திரி அருகாமை) கண்டிரோட், மிருசுவில். 745

## தேவை

கந்தோருக்குப் பொறுப்பாக விருப்பதற்கு ஆங்கிலம் நன்கு தெரிந்த பெண் தேவை. பிணைகட்ட வேண்டும். ஏ. சி. ஸ்ரேசனேஸ்-ஏ. சி. எஸ். பிலரலிக் சேவிஸ், த. பெ. இல. 74, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் 15-3-69-க்கு முன் விண்ணப்பிக்கவும். 744

யாழ்ப்பாணத்தில் பிரபல ஹொட்டல் ஒன்றிற்கு பணியாட்களாக (வெயிற்ரேஸ்) வேலை செய்வதற்கு பையன்கள் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். மேற்பார்த்து 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 743

## வாடகைக்கு

வீடு:

கோண்டாவில் காங்கேசன்துறை வீதியில் மின்சாரவசதி கார் கராச் இணைப்புடன் விசாலமான வீடு வாடகைக்கு இருக்கிறது விபரங்களுக்கு க. சோமசுந்தரம், அதிபர், மகாவித்தியாலயம். கோப்பாய். 541

## தவறிவிட்டது



# விளம்பரம்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்க அங்கத்தவர்களுக்கு,

வைத்தியசாலைச் சங்கத்தின் 31-வது ஆண்டுக் கூட்டத்தில் அங்கத்தவர்கள் சமர்ப்பிக்க விரும்பும் பிரேரணைகளை 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ந் திகதி திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு முன் கௌரவ காரியதரிசிக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கும்படி வேண்டுகின்றோம்.

பிரேரணைகள் பிரேரிப்பவரினதும் அனுமதிப்பவரினதும் கைச்சாத்துடனும் அங்கத்துவ இலக்கத்துடனிருந்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

எஸ். கே. சிவாநந்தன்,
கௌரவ காரியதரிசி.

கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்,
மூளாய்,
சுழிபுரம்,
5-3-69. 1218


## புதிய நிர்வாகிகள்

வவனியா, ஞாயிறு

தமிழரசுக்கட்சி வவனியா மாவட்டக்கிளை நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. செ. ஞானசேகரம், செயலாளர்: திரு. வி. கே. வேலுப்பிள்ளை, பொருளாளர்: திரு. மு. சபாரத்தினம். செயற்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

0 0 0

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொக்குவில் சனசமூகநிலையத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர் திரு கே. ரி. இராசா உப. தலைவர் திருவாளர்கள் வி. சண்முகநாதன், பி. கனகரத்தினம் செயலாளர் திரு. கே. என். சிவராசா உபசெயலாளர் திரு. வீ. பவசிங்கம், பொருளாளர் திரு சி. மகேந்திரன் உப. பொருளாளர் திரு என். ஈஸ்வரராசா நிலையப் பொறுப்பாளர் திரு ஆர். தாமோதரம்பிள்ளை கணக்குப் பரிசோதகர் திரு வி நாகநாதன் விளையாட்டுத் தலைவர் திரு. பி. சந்திரநாதன் ஆறுபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

(ந. நி)

0 0 0

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். இந்துக் கல்லூரி

## யாழ்ப்பாண மாநகரசபை சேரி ஒழிப்புத்திட்டத்தின் கீழ் வீடு நிர்மாணிப்பதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன

(1) பின் வருவனவற்றிற்கான கேள்விப்பத்திரங்கள் 10-4-69தேதி காலை 10 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

(A) நரிகுண்டு 13-ம் வட்டாரத்தில் 10 வீடுகள் நிர்மாணித்தல்.

(B) பாசையூர் 7-ம் வட்டாரத்தில் 8 வீடுகள் நிர்மாணித்தல்.

(C) திட்டி 5-ம் வட்டாரத்தில் 6 வீடுகள் நிர்மாணித்தல்.

(2) விண்ணப்பதாரர்கள் ஏப்பிரல் 10 ம் திகதி காலை 11 மணிக்குக் கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் சமுகமளித்திருக்க அனுமதிக்க படுவர்.

(3) தொழிற்பகுதி பொறியியலாளரிடம் இருந்து பெறப்படும் விண்ணப்பப் பத்திரத்தில் கேள்விகள் கோரப்படவேண்டும். இவ் விண்ணப்பப் பத்திரங்களை மார்ச் 22-ம் தேதி பகல் 12 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். பத்திரம் பெறும் பொழுது ரூபா100/- கேள்வி வைப்புப் பணமாகவும், மேலே குறித்த ஒவ்வொரு வேலைக்கும் கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 25/- தனித்தனியே கட்டவேண்டும். இது திருப்பித் தரப்படமாட்டாது.

வேலைப்பொறுப் பேற்கத் தகுதிபெறும் விண்ணப்பதாரர், ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதும் வைப்புப் பணம் ரூபா 100 -ம் திருப்பித்தரப்படும்.

(4) எல்லாக் கேள்விகளும் இரண்டு பத்திரங்களில் நிரப்பப்படுவதோடு அரக்கு முத்திரையிடப்பட்டிருக்க வேண்டும். கேள்விகள் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மூலையில்- 'வீடுகள் நிர்மாணிப்பதற்கான கேள்விகள்' என எழுதப் படவேண்டும்.

(5) மாநகரசபையுடனோ அல்லது பொதுவேலைப் பகுதியுடனோ ரூபா 35,000 -க்குக் குறையாது பதிவுசெய்து கொண்டுள்ளதற்கான அத்தாட்சியுள்ள கொந்தராத்துக்காரர்களுக்கு கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

(6) இதுபற்றிய மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் அறிய விரும்புபவர்கள் தொழிற்பகுதிபொறியியலாளருக்கு விண்ணப்பித்து அறிந்துகொள்ளலாம்.

(ஏ. ரி. சுந்தரம்)
மாநகரசபை ஆணையாளர்,
யாழ். மாநகரசபை

# விவேகானந்தசபை சைவசமயபரீட்சை முடிவுகள்

(நேற்றய தொடர்ச்சி)

(கொழும்பு விவேகானந்த சபையாரால் 1967-ஆம் ஆண்டு அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சையில் கீழ்க்காணும் பாடசாலையிலுள்ள மாணவர் சில வித்தியாசாலைப் பரிசில்கள் பெறத் தகுதியுள்ளார்கள்.

மாணவர் ஒவ்வொருவருக்குமெதிரே கொடுக்கப்பட்டுள்ள இலக்கங்கள் ஒவ்வொரு பிரிவைக் குறிக்கின்றனவாக அமைந்துள்ளன. 1. பாலர் பிரிவு-1 — 2. பாலர் பிரிவு-2 3. ஆரம்ப பிரிவு 1 4. ஆரம்ப பிரிவு 5 5. கீழ்ப்பிரிவு-1 6. கீழ்ப்பிரிவு-2 7. மத்தியபிரிவு 8. மேற்பிரிவு-1 9 மேற்பிரிவு-2.)

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி: 5. பப குலேந்திரன் 6. கு ஜெயசுந்தரம் 7. கொ இராசமலர் 9. சோ. சண்முகநாதன்.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி: 5. ஐ புனிதவதனு 7. தா புனிதவதி 8. வி தவமணி 9. இ ஜெயந்தி.

உடுப்பிட்டி அ மி கல்லூரி 3. வி விஜயகுமார் 4. பா செல்வரத்தினம்.

கம்பர்மலை இல.1 அ த க பாடசாலை 6. த இராசசுலோசனு.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை: 3. பொ கயதா

அச்சுவேலி வளலாய் அமி பாடசாலை 4. நா நாகேஸ்வரி 9. நா பரிமளம்

யா-ஆவரங்கால் மெ மி பாடசாலை: 9. ம மகேந்திரன்.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி: 3. ந நாகநாதன் 5. க சசிலேகா 6. த நவரத்தின ராசா 7. ஆ யோகேஸ்வரி 8. கு இராசேஸ்வரிஅம்மா;

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி: 3. சி உமாசங்கர் 4. க சண்முகலிங்கம் 5. சி தயாரஞ்ணி 6. செ நடராசா 7. சி தேவராசா 8. வே நாகேஸ்வரி 9. நா பஞ்சாட்சரம்.

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை: 9. து மல்லிகாதேவி

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி: 3. இ மதிரஜனி 4. ந இரவீந்திரன் 5. சி சகுந்தலா 6. க சுபத்திரா 7. ப ஜெகதீஸ்வரி 8. சி சாந்தநாயகி பத்மினி 9. செ இராசாத்தி

திருநெல்வேலி ... செங்குந்த இந்துக் கல்லூரி 3, கா பானுமதி 4. சி

நிதி, 4. த. சொர்னலிங்கம் 5. த. விஜயலக்ஷ்மி, 6. இ. மகேந்திரராஜா (உவந்தளிப்பு)

வண்ணார்பண்ணை இந்துக் கல்லூரி த.க. பாடசாலை: 2. கு. தேவயானி, 3. சி. சத்தியதேவி அம்மையார், 4. தி. கதிர்காமநாதன், 5. சு. இரவிந்திரன்' 7. சி. புஷ்பராணி.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி: 8. பொ. பவானி 9. மு. அசோதா தேவி.

யா-தாவடி இந்து த. க. பாடசாலை: 3. ஞா. திருஞானகுமார்.

கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாசாலை: 3. ச. மகேஸ்வரன்.

உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலை: 3. ச. வாணிதேவி.

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை: 3. ந. இராமதேவன், க. சாந்தினி, 9. சி செல்வராணி, த. யோகேஸ்வரி.

உரும்பராய் இந்துக்கல்லூரி: 9. பொ. ஜெயலட்சுமி, 5. ந. மாலினிதேவி.

வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்: 5. க. சிவகுமாரன், 6. சி. ஞானதேவி 7. க. முருகையா, 8. ஐ. ஈஸ்வரமூர்த்தி, 9. ஜெ. தேவகுஞ்சராம்பாள்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி: 3. சி. சுகுணதேவி, 4. தி. கருணதேவி, 5. க. கேதீஸ்வரன், 6. வ. ஜெயந்தா, 7. செ. பஞ்சாட்சரம்.

காங்கேசன்துறை அ மி. ஆங்கிலப் பாடசாலை: 7. க. தயாநிதி, 9. ந. கலாநந்தினி.

கீரிமலை நகுலேஸ்வர வித்தியாசாலை: 9. கா. பூரணம்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி: 2. ச. யோகராணி 3. க. துளசிபாய். 4. வி. அனந்தசயனன், 5. செ. நரேந்திரன், 7. வே. கலாவதி, 8 வை ஞான..., 9. க குகநேசன்.

யா-குரும்பசிட்டி த. க. பாடசாலை: 3. வெ. வாமதேவன், செ. வாணி, சி. லோகராணி.

ஏழாலை அரசினர் மகா வித்தியாலயம்: 9 அ. பத்மநிதி.

சுன்னாகம் மயிலணி வித்தியாசாலை: 3. க. செல்வநாதன்.

... ஸ்கந்த ... கல்லூரி: 5. சி. நிராகுலகாந்தன், 6. செ. மகேஸ்வரன்.

புங்குடுதீவு அரசினர் மகா வித்தியாலயம்: 5. மா நிர்மலா 6. ப விசுவலிங்கம் 7. த சுந்தரமூர்த்தி, வி தர்மராசா ப வாசுகி 8. த. சரோஜினிதேவி 9. வே சண்முகலிங்கம் த கோகிலா தேவி.

நயினாதீவு அரசினர் மகா வித்தியாலயம்: 5. மு ரஞ்சிதமலர், 6. வ விக்னேஸ்வரன் சி விஜயலட்சுமி.

நயினாதீவு ஸ்ரீ கணேச வித்தியாசலை: 3. க உமாஸ்ரீ தி திருக்குமாரி.

கொ - தட்டாதெரு கணபதி வித்தியாலயம்: 2. இ விஜயலட்சுமி.

கொட்டாஞ்சேனை மத்தியமகாவித்தியாலயம்: 6. கு செந்தில், 7. க மல்லிகா

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி: 5. சு ஸ்ரீநந்தகுமார் 7. சோ கருணாநிதி பெ சிவானந்தம் இ இரஞ்சித்.

வேலணை மத்தியமகா வித்தியாலயம்: 5 மு ஞானசேகரம் 9. து யோகேஸ்வரலிங்கம் ஜெ பொன்மதி.

கொ- றில்வீதி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை 3. ந சாந்தகுமாரி.

வத்துகாமம் கிறிஸ்தவ தேவாலயக்கல்லூரி: 9. சி நடராஜா.

யா- புலோலி மெ. மி. த. க பாடசாலை: 3. தெ தவேந்திரசிங்கம்.

காரைதீவு இ கி ச ஆண்கள் பாடசாலை; 3. அ மகேந்திரன்.

திருகோணமலை அர்ச் பிரான்சிஸ் சவேரியார் பாடசாலை: 8. வ அருந்தவராசா.

முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி; 5. நா லோகநாயகி 7. இ கிருஷ்ணபிள்ளை 8. வ இராசரெத்னம், 9: சி இராதாமலி.

யா-இடைக்காடு சைவாங்கிலவித்தியாசாலை: 5. செ சிவமனோகரி, 8. சி ஞானேஸ்வரி 9. ச தனலட்சுமி.

அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரி: 5. பு சந்திரன் 8. செ பாலச்சந்திரன் 9. செ தேவராணி, (முற்றும்)

## ஆண்டு விழா

உரும்பராய், சனி

இணுவில் தேசிய விவசாயக்கழகத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை மண்டபத்தில் திரு. செ. இலகுநாதன் தலைமையில் நடைபெற்றபோது 4-ம் ஆண்டு நிறைவு விழாவை, ஏப்ரல் மாதக் கடைசிவாரத்தில் நடாத்துவதென்றும் அப்போது விளையாட்டுப் போட்டி ஒன்றை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில்

## உதைபந்தாட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம், சனி

நீண்டகால இடைவெளிக்குப்பின், யாழ்ப்பாணத்தில் உதைபந்தாட்டப் போட்டிகள் அடுத்தடுத்து நடைபெறவிருக்கின்றன.

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தினால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி, காரியாதிகாரியின் ஆதரவுடன் சனசமூக நிலையங்களிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி, அரியாலையின் 'சுதேசிய விழா'வை முன்னிட்டு நடாத்தப்படும் 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டி ஆகியன மிக விரைவில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கின்றன.

அரியாலை 'சுதேசிய விழா' வையொட்டி நடாத்தப்படும், நொக்கவுட் உதைபந்தாட்டப் போட்டியே முதலில் ஆரம்பமாகின்றது. இப்போட்டி இம்மாதம் 10-ம் திகதி யாழ். விளையாட்டரங்கில் ஆரம்பமாகின்றது. அன்றைய தினம் நடைபெறும் முதல் போட்டியில், வல்வெட்டித்துறை 'புளூஸ்' கோஷ்டியும்-சென் ஜேம்ஸ் கோஷ்டியும், 2-வது போட்டியில் கடற்படை உதைபந்தாட்டக் கோஷ்டியும்-பாடும்மீன் 'பி' பிரிவுக் கோஷ்டியும் மோதுகின்றன.

(தே. நி)

## இணுவில் வெற்றி

உரும்பராய், சனி

இணுவில் இந்து விளையாட்டுக்கழக தாச்சி கோஷ்டிக்கும், சுன்னாகம் தாச்சிக் கோஷ்டிக்குமிடையில் இணுவில் மைதானத்தில் நடைபெற்ற தாச்சிப் போட்டியில் இணுவில் இந்து 5-3 பழங்களினால் வெற்றியீட்டியது.

## ருவின்ஸ் வென்றது

வவுனியா, வெள்ளி

நல்லூர் ருவின்ஸ் கோஷ்டியினருக்கும் வவுனியா ஒலிம்பிக் கோஷ்டியினருக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் ருவின்ஸ் 6 1 கோல்களால் வெற்றிபெற்றது. வவுனியா நகரசபை மைதானத்தில் நடந்த இப்போட்டிக்கு திரு எஸ். சௌந்தரநாயகம் மத்தியஸ்தம் வகித்தார்.

## கிளித்தட்டுச் சுற்றுப்போட்டி

## மெய்வல்லுனர் போட்டி குழு

உரும்பராய், சனி

கோப்பாய்வட்டாரப்பாடசாலைகள் மெய்வல்லுனர் போட்டியை நடத்துவதற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் கோப்பாய் வட்டார வித்தியாதிகாரி திரு. வே. சண்முகநாதன் தலைமையில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெற்றபோது, விளையாட்டுப்போட்டிச் சபையின் பிரதம நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர்: திரு. வே. சண்முகநாதன் (கோப்பாய் வட்டார வித்தியாதிகாரி), உப தலைவர்கள்: திரு. க. இ. குமாரசாமி. திரு. சு. குமாரசேகரம், இணைச்செயலாளர்கள்: திரு. எஸ். வி. வேலுப்பிள்ளை, திரு. என், இரத்தினம், பொருளாளர் திரு. ம. க. நடராசா.

விளையாட்டுப்போட்டியை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடத்துவதெனவும், கல்லூரி அதிபர் பிரமஸ்ரீ சீ. ஸ்ரீநிவாசனையே பிரதமவிருந்தினராக அழைப்பதெனவும் தீர்மானங்கள் நிறைவேறின.

## இடமாற்றம்

பண்டத்தரிப்பு, சனி

திருக்குடும்பக் கன்னியர் சபையைச் சேர்ந்த ஆசிரியைகளான எட்டுக் கன்னியாஸ்திரிகள் மன்னார்ப்பகுதியிலிருந்து இப் பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

0 0 0

அநுராதபுரம், சனி

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கடமையாற்றிய வித்துவான் எம். சபாரெத்தினம் அநுராதபுரம் விவேகானந்த தமிழ் மகாவித்தியாலயத்திற்கு இம்மாதம் தொடக்கம் இடமாற்றம் பெற்றுள்ளர்.

## மீண்டும் வேலை

சங்கானை, சனி

அண்மையில் சங்கானை பட்டின சபைத்தலைவர் முன்னிலையில் காரியாலய லிகிதர்களுக்கும் சந்தைவரி வசூலிப்பவர் ஒருவருக்குமிடையில் நடைபெற்ற சச்சரவு காரணமாக ப. ச தலைவர் திரு. ஆறுமுகம் ஊழியர் ஒருவரை தற்காலிக வேலைநீக்கம் செய்திருந்தது இதுசம்பந்தமாக உப தலைவர் நடாத்திய விசாரணையில் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்த சுப்பிரமணியம் மீண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்புடன் விசாலமான வீடு வாடகைக்கு இருக்கிறது விபரங்களுக்கு க. சோமசுந்தரம், அதிபர், மகாவித்தியாலயம், கோப்பாய். 541

## தவறிவிட்டது

உறுதிகள்:

5-3-69ல் கிளிநொச்சியிலிருந்து காரைநகர் சென்றுகொண்டிருந்த பஸ்ஸில் இரண்டு உறுதிகள் கொண்ட என்வலப்பொன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் காசிப்பிள்ளை அன் கோ, 82, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 746

...நித தலைவர் திரு. ... நாதன் ஆறுபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

(ந. நி)

0 0 0

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். இந்துக் கல்லூரி உயர்தர கலைப்பிரிவு மாணவ தமிழ் பேரவையின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: செல்வன் வி. மாணிக்கம், செயலாளர் செல்வன் ஏ சி. மகுறூப் பொருளாளர் செல்வன் செ. செல்வராசா ஐந்து பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

ந. நி


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்.

நாகேஸ்வரராவ்-சாவித்திரி நடித்த

தேவதாஸ் (புதிய கொப்பி)

இங்ஸ்லி



பிளாஸா

வெம்பிளி (கண்டி)

ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் சினிமாஸ் திரைகளில்

சிவாஜி கணேசன் கே.ஆர். விஜயா முத்துராமன், எல். விஜயலக்ஷ்மி, நாகேஷ், குமாரிசச்சு இன்னும் பலர் நடித்த ஸ்ரீதரின் மகோன்னத ஈஸ்ட்மென் கலர்ப் படைப்பு



ஊட்டிவரை உறவு

இசை: விஸ்வநாதன் பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

அத்துடன் காண்பிக்கப்படுகிறது யாழ் வெலிங்டன் திரையில்

மு. கருணாநிதியின் விமர்சனத்துடன்

S S. வாசன் அவர்களால்

ஈஸ்மன்கலரில்படமாக்கப்பட்டு சென்னையில் நடைபெற்ற

இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டு கோலாகல காட்சியையும்



மற்றும்

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணா ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்றுவதையும் பார்க்கலாம்!


...விபரங்களையும், நிபந்தனைகளையும் அறிய விரும்புபவர்கள் தொழிற்பகுதிபொறியியலாளருக்கு விண்ணப்பித்து அறிந்துகொள்ளலாம்.

(ஏ. ரி. சுந்தரம்)

மாநகரசபை ஆணையாளர், யாழ். மாநகரசபை

நகரசபைக் காரியாலயம், யாழ்ப்பாணம்.

மார்ச் 5, 1969. 1219


மானிப்பாய் வெஸ்லி சினிமா

தினசரி 6-30, 9-30 மணி ப்ரிபோயா, போயா 2-30 மணி

சிவாஜி ஜெமினி சாவித்திரி நடித்த

கப்பலோட்டிய தமிழன் (புதிய கொப்பி)

55வது தினம்!

ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள் 10-30, 2-30, 6-30, 9-45

எம். ஜி. ஆர்-ஜெயலலிதா மற்றும் பலர் நடித்த

ஒளி விளக்கு (ஈஸ்ட்மென் கலர்) (எஸ். ரி. ஆர். வெளியீடு)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

எம். ஜி. ஆர் - ஜெயலலிதா நடித்த

குடியிருந்த கோயில்

இணுவில் ஸ்ரீ காலிங்கன்

தினசரி 6.30, 9-30 ப்ரிபோயா, போயா 2-30

சிவாஜி சாவித்திரி நடித்த

படித்தால் மட்டும்போதுமா

MANOHARA JAFFNA

Dailyat: 4-45, 7-00 & 9-45 p.m.

Pre-poya, Poya 10-30 a.m.

Warren Beatty in BONEIEAND CLYDE

(Aduts only) (Techni color)

REGAL at Jaffna

Daily at 4-45, 7-00 & 9-45, p. m

Rita Tushingham & Oliver Reed n THE TRAP (Adults)


4. ந இரவீந்திரன் 5. சி சகுந்தலா 6. க சுபத்திரா 7. ப ஜெகதீஸ்வரி 8. சி சாந்தநாயகி பத்மினி 9. செ இராசாத்தி

திருநெல்வேலி கிழக்கு செங்குந்த இந்துக் கல்லூரி 3, கா பானுமதி 4. சி வத்ஸலா 5. ந சிவபாதசுந்தரம் 8, வி யோகேஸ்வரி 9, வ பத்மினி

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை: 3: ஆ வதனசோதி'

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை: 1. த கமலினி ச சத்தியவதி 2. ஆ குகேந்திரதாஸ் 3. ப கலாராசி 4. பொ தெய்வேந்திரம் சி. பாலேந்திரன்

நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரவித்தியாலயம்: 3, மு, சிவநாதன்

அரியாலை கனகரத்தினம் மகாவித்தியாலயம் 6. சி செல்வராசா 7. வி பரமநாதன் 9, சு செல்வராணி

யாழ் பர்ணம் மத்திய கல்லூரி: 3. வெ. இரவீந்திரன் 4. அ பத்மேஸ்வரன் 5, க, உமாசரன் 6, சி யோகேந்திரா 7. இ குகதாஸன் 8, ஐ கிருபாகரன், அ ஆனந்தராசா.

கொட்டடி நமசிவாய வித்தியாசாலை: 3. ப ஞானேந்திரன்.

வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம்: 4. இ. யோகேஸ்வரன், 5. ச. வனஜா, 6. ம. வலிதாம்பாள், 9. க. இரவீந்திரன்.

யா-சேணியத் தெரு ஆங்கில பாடசாலை: 3. க. கலா

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

ஞாயிறு 9—3—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 தொழிலாளர் வேளை, 6-45 பா வளம், 7-00 மத்தாப்பு, 7-30 பேட்டி, 7-45 வாத்திய இசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைச் சித்திரம், 10-00 நேயர் விருப்பம்.

வித்தியாலயம்: 9 அ. பதும நிதி.

சுன்னாகம் மயிலணி வித்தியாசாலை: 3. க. செல்வநாதன்.

யா-கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி: 5. சி. நிராகுலகாந்தன், 6. செ. மகேஸ்வரன். 7. சி வரதராசன் 8. க கீதாதேவன் 9. பொ நாகராசா.

அளவெட்டி அருணசலம் வித்தியாசாலை; 3. ம சுசீலாதேவி.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி: 6. இ. சசிதாரி 7. த சரோமளாதேவி க மேனகாதேவி 9. செ ஞானமலர்.

இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை: 3. சி. ஸ்ரீகலா சேனை.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில வித்தியாசாலை: 9. ஆ இராசேஸ்வரி.

மானிப்பாய் மகளிர் கல்லூரி: 5. சி இந்திரா 7. க பாமநளினி 8. இ. அருள்நங்கை இ மகாலட்சுமி 9. நா கோணேஸ்வரியம்மா செ சுசீலா.

சண்டிலிப்பாய் வடக்கு த. க. பாடசாலை: 3. க மல்லிகாதேவி.

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி: 5. ச இரத்தினசிங்கம் (உவந்தளிப்பு) 6. பொ பூமணி 7. சே மாரிமுத்து.

யா-பிளவத்தை அமெரிக்கன்மிஷன் பாடசாலை: 3 பு கமலவதனி.

பண்ணாகம் தெற்கு மெய்கண்டான் வித்தியாசாலை: 9 அ சரஸ்வதி.

சுழிபுரம் விக்ரோறியா மகா வித்தியாலயம்: 4. சி சிவகலை 5 அ சுகுமார் 6. வி திரிகரன் 7. ச தேவமஞ்சரி 9. ப இராசகோபாலன்.

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை; 2. ச சிதம்பரப்பிள்ளை, 3. சி வரதராஜா ப பவானி 4. இ பிரேமாவதி 5. நா இரத்தினவதனி 6. த தேவராசன்.

அராலி தெற்கு சரஸ்வதி வித்தியாசாலை: 3. ச. சதானந்தன்.

யா-ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலை: 3. செ செல்வரூபி.

யா-தங்கோடை அ. மி: பாடசாலை: 3. செ ஞானவல்லி.

யா-வியாவில் சைவபரிபாலன வித்தியாசாலை: 3. த தவேந்திரன்.

யா-இலகடி சைவத்தமிழ்க் கலவன் பாடசாலை: 3 க ஸ்ரீரஞ்சன்.

யா-சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலை: 3. க வசந்தி.

வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை: 3. வி குமரகுருபரன்

புங்குடுதீவு ஸ்ரீசண்முகநாதன் வித்தியாசாலை: 3. க சிவகலை

புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலை: 3. ஆ கலைமதி.

...யில் நடைபெற்றபோது 4-ம் ஆண்டு நிறைவு விழாவை, ஏப்ரல் மாதக் கடைசிவாரத்தில் நடாத்துவதென்றும் அப்போது விளையாட்டுப் போட்டி ஒன்றை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

விழா உப குழுவொன்றும் திரு. க: வேதநாயகம் தலைமையில் நியமிக்கப்பட்டது.

## இன்றைய பலன்

ஞாயிற்றுக்கிழமை (9-3-69)

மாசி மாதம், 26 உ

திதி- பஞ்சமி காலை 6-29 மேல் ஷஷ்டி.

நட்சத்திரம்- விசாகம் இரவு 8-40 மேல் அனுஷம்.

ராகுகாலம்- 4-54 6 24.

சுபநேரம்- 9-24 10-54.

இன்று பிறந்தவர்களுக்கு— கடற்றொழில் புரிவோர்க்கு நிம்மதி தரும் ஆண்டாகும். குருதொழில் புரிவோர்க்கு குமைச்சல் அதிகம். குற்றவாளிக்கு மன்னிப்பு உண்டு. குடும்பக் கவலை உறவாடும். நிலையான சுகம், வரவிலும் திருப்தி சிற்பத்தொழில் சிறப்புத் தரும் நல்லாண்டாகும்.

மேஷம்- கேலிக்கணை கேடுவரும் பின்னே.

ரிஷபம்- தொழில்நலம் பெறும், எழில் சேர்க்கும் வாழ்வு.

மிதுனம்- சினம் சீறும் சிந்தனை வேண்டும்.

கடகம்- பிதாவழிச் சுகம், பெரியோர் நட்பு

சிம்மம்- மனையாட்சி மலரும் மகிழ்ச்சி உண்டு.

கன்னி- நல்லவை நடக்கும், நலமுடன் வாழ்வீர்.

துலாம்- கடன்பட நேரிடும், கவலையும் உண்டு.

விருச்சிகம்- தாழ்ந்து போ, தலைமைகிடைக்கும்.

தனுசு- சொல்லும் வெல்லும், சுகம் உண்டு.

மகரம்- எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

கும்பம்- அன்னைமொழி அமிர்தம் அமைதியுடன் இரு.

மீனம்- பாக்கியவிருத்தி பரம்பொருள் சிந்தை.

—சோதிடக்கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

நகரசபை மைதானத்தில் நடந்த இப்போட்டிக்கு திரு எஸ். சௌந்தரநாயகம் மத்தியஸ்தம் வகித்தார்.

## கிளித்தட்டுச் சுற்றுப்போட்டி

அல்லைப்பிட்டி, சனி

வேலணை புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்படும் கிளித்தட்டுச் சுற்றுப் போட்டி இம்மாத இறுதியில் நடைபெற இருக்கிறது. இப்போட்டியில் வெற்றி பெறும் கழகத்திற்கு செல்லத்துரை ஞாபகார்த்த வெற்றிக்கேடயம் வழங்கப்படவிருக்கிறது. இப்போட்டியில் தீவுப்பகுதியைச் சேர்ந்த பல விளையாட்டுக் கழகங்களும், சனசமூக நிலையங்களும் பங்குபற்றவிருக்கின்றன.

...தலைவர் திரு. ஆறுமுகம் ஊழியர் ஒருவரை தற்காலிக வேலைநீக்கம் செய்திருந்தது இதுசம்பந்தமாக உப தலைவர் நடாத்திய விசாரணையில் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்த சுப்பிரமணியம் மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்.


ரவி என்றால் ... "சரி" ...



ரவி பிரஷ்களுள் நிலையான பெயர்.

உறுதியற்ற சிலிர்க்கும் முடிகள்

சுவர்களைக் களங்கப் படுத்தும் கோடுகள்

தீந்தையை வீணடித்தல்

இவை ரவி பிரஷ்களில் இல்லை.

ரவி பிரஷ் வாங்கும் போது நீங்கள் பூரண நம்பிக்கை அடையலாம். காரணம் ரவி தீந்தை பிரஷ்கள் இறக்குமதி செய்யப்பட்ட சுத்தமான முடிகளைக் கொண்டு செய்து அவற்றின் தரமும் நீண்ட சேவையும் உறுதிப்படுத்தும் விதம் பரிசோதிக்கப் படுகின்றன.

நீங்கள் அடுத்த முறை தீந்தை பிரஷ்கள் வாங்கும் போது பிடியில் ரவி என்ற பெயர் இருக்கிறதா எனப்பார்த்து வாங்குங்கள்.

அதுவே தரத்தின் உத்தரவாதம்.

சகல தேவைக்கும் ஒரு ரவி பிரஷ் உண்டு.

இவற்றின் வகைகளைக் காண்பிக்க உங்கள் வியாபாரியைக் கேளுங்கள்.

ரவி இன்டஸ்றீஸ் லிமிடெட்

RI-2-68-MASTERS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருகத்தனமாகவும் கொடூரமாகவும் சீனர்கள் நடந்து கொண்டனர்



## எல்லைமோதல் பற்றிரஷ்யா மீண்டும் குற்றச்சாட்டு

## மாஸ்கோவில் சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

மாஸ்கோ, மார்ச் 8

கடந்த ஞாயிற்றுக்கிழமை சீன – சோவியத் எல்லையில் சீனக் காவல் படையினர் மிருகத்தனமாகவும், இரக்கமற்ற முறையிலும் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்று சோவியத் அதிகாரிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர். சீன அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள ஒரு குறிப்பில் இந்தக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாஸ்கோவில் சீனத்தூதரகத்தின்முன் நடைபெற்ற பெரியதொரு ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

சூரி ஆற்றின் கரையில் சீன சோவியத் எல்லையில் சுமார் 300 சீனக் காவல் படையினர் அத்துமீறி ரஷ்யப் பகுதிக்குவந்து ரஷ்ய வீரர்களை மிக அருகிலிருந்து சுட்டும், துப்பாக்கி முனைகளால் குத்தியும் படுகேவலமாக நடந்துகொண்டார்களாம். இந்த மோதலில் 31 ரஷ்யர் கொல்லப்பட்டதாகவும் 14 பேர் காயமடைந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

சீனர்கள் தம் நாட்டில் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கண்டுள்ள தோல்விகளை மூடிமறைக்கவும் மக்களின் கவனத்தை வேறு பக்கம் திருப்பவும் இந்த எல்லைத் தகராறைப் பயன்படுத்துவதாக இஸ்வெஸ்தியா குற்றஞ்சாட்டியுள்ளது.

நேற்று மாஸ்கோவில் சீனத்தூதரகத்தின் முன் மிகப்பெரிய ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது. ஆயிரக்கணக்கான ரஷ்யர்கள் சீனத்தூதரகத்தை நோக்கி ஆர்ப்பாட்டம் செய்துகொண்டுபோனார்கள். சீன அரசுக்கும், மாசேதுங்கிற்கும் எதிரான கோஷங்களை அவர்கள் கோஷித்தார்கள். சீன தூதரகத்தின்மீது கற்களையும் மைபுட்டிகளையும் அவர்கள் வீசினார்கள். தூதரகத்தின் யன்னல்கள் எல்லாமே நொறுக்கப்பட்டுள்ளன. ஆர்ப்பாட்டக்காரர்களைப் படம்பிடிக்க முயன்ற ஒரு சீனர் மையினால் குளிப்பாட்டப்பட்டார்.

## ஸ்மித் தென் ஆபிரிக்கா பயணம்

சாலிஸ்பரி, மார்ச். 8

ரொடீஷியாவின் சட்டவிரோத ஆட்சியாளர் அயான்ஸ்மித் இன்று தென்னாபிரிக்காவுக்குப் போகிறார். ஓய்வு எடுத்துக்கொள்வதற்காக தென்னாபிரிக்காவுக்குப் போனாலும்அங்கு தென்னாபிரிக்க அமைச்சர்களுடன் ஆலோசனைகள் நடத்துவார் என்று தெரிகின்றது.

கராடீஷியாவில் புரட்சிகளில் ஈடுபட்டதாகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த 49 ஆபிரிக்கர்களுக்கும் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டுள்ளது. 44 ஆபிரிக்கஇனத்தவர்களுக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படவிருக்கின்றது.



## கடற்படையினர் அட்டூழியம்

புத்தளம், சனி

கற்பிட்டியிலுள்ள கடற்படையினர் இங்குள்ள ஒரு கடையைக் கொள்ளையடித்துத் தீ மூட்ட எத்தனித்தபோது பாவட்ட அதிகாரி திரு. ஜே. எஸ். குணரத்தினம் ஸ்தலத்திற்கு விரைந்ததைத் தொடர்ந்து இச்செயல் தடுக்கப்பட்டதாம். புத்தளம் மாகாண அரசாங்க அதிபருக்கு இவ்விஷயம் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பிலிருந்து கடற்படை அதிகாரிகள்வந்து விசாரணைநடத்திவருவதாகத் தெரியவருகிறது. கடற்படையினரின் குற்றச் செயல்கள் இப்பகுதியில் அத்துமீறிவிட்டதாக மக்கள் மத்தியில் பேசிக்கொள்ளப்படுகிறது.

## ஆபத்தான சோதனையை அற்புதமாக முடித்தனர்

### அப்போலோ-9 வீரர்கள்

வாஷிங்டன், மார்ச் 8

அப்போலோ-9 ல் விண்வெளியில் பூமியைச் சுற்றி வலம் வந்துகொண்டிருக்கும் அமெரிக்க விண்வெளி வீரர்கள் தமது சாதனைகளுள் மிகவும் ஆபத்தானதும், சிரமமிக்கதுமான ஒரு சோதனையை நேற்று வெற்றிகரமாகச் செய்து முடித்திருக்கிறார்கள்.

சந்திரனில் மனிதன்போய் இறங்கி பின் மீண்டும் பூமிக்குத் திரும்பி வருவதற்கு இந்தச் சோதனை மிகவும் உதவியாக இருக்கும் என்றும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அடுத்த கோடையின் போது சந்திரனில் மனிதனை இறக்குவதற்கு முடியும் என்று இந்தச் சோதனை வெற்றிகரமாக முடிந்ததைக் கண்டபின் அமெரிக்க விண்வெளிப் பயணப் பகுதியின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று விண்வெளி வீரர்கள் தமது தாய் கலத்திலிருந்து சந்திரக் கலத்தைப் பிரித்துக்கொண்டு விண்வெளியில் பிரயாணம் செய்தார்கள். இந்தக் கலத்தில் இருந்த இரு வீரர்களும் ஒரு ராக்கட்டை வெடிக்கச் செய்ததின் மூலம் சந்திரக்கலத்தை தாய்க்கலத்தினின்றும் வெகு தூரம்வரை அதனை செலுத்தினார்கள். ஒரு கட்டத்தில் சந்திரக் கலம் தாய்க் கலத்திலிருந்து சுமார் 100 மைல் தொலைவுக்கு போயிற்று. அப்பொழுது தாய்க் கலத்தில் ஒருவர் மட்டுமே இருந்தார். சுமார் ஆறு மணி நேரம் சந்திரக்கலம் தனியாகப் பிரிந்து இருந்தது.

மனிதன் சந்திரனில் இறங்குவதற்கு இப்படியான ஒரு கலத்தில்தான் போய் [illegible]ணமாகவே இதற்கு சந்திர கலம் என்று பெயரிடப்பட்டிருக்கின்றது.

ஆறுமணி நேரத்தின்பின் சந்திரகலத்தை மீண்டும் தாய்க் கலத்துடன் இணைக்கும்படி அந்த வீரர்களுக்கு உத்தரவிடப்பட்டது. இதன் பின்தான் மிகவும் ஆபத்தான கட்டத்தை அவர்கள் கடக்க வேண்டியிருந்தது. பூமியில் விண்வெளிப் பயண கட்டுப்பாட்டுப் பகுதியினர் மிகவும் பதட்டத்தோடு விண்வெளியில் நடப்பவைகளை அவதானித்துக் கொண்டிருந்தனர். சந்திரக் கலத்தை தாய்க்கலத்தில் இணைப்பதில் முதலில் சிறிது சங்கடம் ஏற்பட்டது. ஆனால் பின்னர் கலம் தாய்க்கலத்துடன் ஒழுங்காக இணைக்கப்பட்டது. அதன்பின் சிறிய சுரங்கம் போன்ற துவாரத்தின் வழியாக இரு வீரர்களும் தாய்க்கலத்திலுள்ள கட்டளைப் பெட்டகத்துக்குள் சென்றனர்.

இந்தச் சோதனை வெற்றியாக முடிந்தவுடன் சந்திரக் கலம் தாய்க்கலத்திலிருந்து பிரிக்கப்பட்டு அண்டவெளியிலேயே விடப்பட்டது. இனி இக்கலம் அண்டவெளியிலேயே இருந்து எரிந்து போகும். பூமிக்குத் திரும்புவதற்கான சாதனங்கள் இந்தக் கலத்தில் பொருத்தப்படடிருக்கவில்லை.

இந்த அற்புதமான சோதனையை நிகழ்த்தியபின்னர் விண்வெளி வீரர்கள் மூவரும் தற்பொழுது பூமியைச் சுற்றி வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். தமது பத்துநாள் பிரயாணத்தையும்முடித்துக்கொண்டு அவர்கள் பூமிக்குத் திரும்புவதற்கு முன் மேலும் பல சோதனைகளை நிகழ்த்துவார்[illegible]

### ஆதித்தன் பிரச்னை

## எதிர்க் கட்சியினர் வெளிநடப்பு

சென்னை, மார்ச் 8

தமிழ்நாடு ராஜ்ய கீழ் சட்ட சபையிலிருந்து எதிர்க்கட்சியினர் நேற்று வெளிநடப்புச்செய்தனா.

எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதம் சட்ட மன்ற விதிகளில் இல்லையென்று தமிழக அமைச்சர் ஆதித்தன் கூறியதைத் திரும்பப் பெற்றுக் கொண்டாலும், அதுபற்றி அவர் வருத்தம் தெரிவிக்காததாலேயே தாம் வெளிநடப்புச் செய்வதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் தெரிவித்தார்.

இதுசம்பந்தமாக அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் பேசுகையில், ஆதித்தன் அவர்கள் சொன்னதை தவறு என்று ஒத்துக கொண்டுவிட்டதால், அதில் பிரச்னை இல்லையென்றும், வருத்தம் தெரிவிக்கவேண்டிய அவசியமில்லையென்றும் கூறினார்.

வருத்தம் தெரிவிக்குமாறு வற்புறுத்த சபாநாயகருக்கு அதிகாரமில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

—

### நெற்காணி

## வரி செலுத்தாதவர் மீது வழக்கு

அராலி, சனி

1965-66-ம், 67-68-ம் ஆண்டுக்குரிய நெற்காணி வரியை இதுவரை செலுத்தாதவர்கள் மீது நீதிமன்ற மூலம் நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாணம் கமத்தொழில் ஆணையாளர் அராலி தெற்கு-கிழக்கு பயிர்ச்செய்கைக்குழு காரிய தரிசிக்கு அறிவித்துள்ளார்.

# எத்தனை பலத்துடன் வந்தாலும் ஒழித்துக்கட்டுவோம்

## ரஷ்யாவுக்கு சீனா எச்சரிக்கை

பிகிங் மார்ச் 8

சீன-சோவியத் எல்லையில் ஏற்பட்ட மோதலையொட்டி சீனாவில் வெளியாகும் 'மக்கள் தினசா' 'விடுதலை சேனை தினசரி' ஆகியவை எழுதிய சோவியத்எதிர்ப்புத்தலையங்கங்களில் ஒரு படுதி பின்வருமாறு:-

மார்ச் 2-ந் திகதி, சீனாவின் ஹெய்லுங்கியாங் மாகாண உஸ்ஸூறி நதியில் சென்பா ஓ தீவிற்குள் ஊடுருவல் செய்து, சீன மக்கள் [illegible] தான் எமது எல்லைப்புற காவற்படையினர், தற்பாதுகாப்பிற்காக எதிர்த்துப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டு, ஆத்திரமூட்டல்களைச் செய்த ஊடுருவல்காரர்களுக்குப் போதியளவு தகுந்த தண்டனையைக் கொடுத்து, சீனாவின் புனித பிரதேசத்தை வெற்றிகரமாகப் பாதுகாத்தனர். சீனா முழுவதிலுமுள்ள படை வீரர்களும் பிரஜைகளும், தாய்த் திருநாட்டின் ஆதிக்[illegible]

## இந்தியாவின் பரப்பளவு

புது டில்லி, மார்ச். 8

இந்திய பிரதேசத்துக்குட்பட்ட சுமார் 1300 தீவுகள் இருக்கின்றன. இந்தியாவின் தற்போதைய பரப்பளவு 32,68,090 சதுர கிலோ மீட்டர். இத் தகவல்களை இந்திய ராஜ்ய சபையில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ்சிங் வெளியிட்டார்.

## இதுவரை 10 பேர் பலி

## ஆந்திர மேல் சபையில் அண்ணாவுக்கு அனுதாபம்

ஹைதராபாத், மார்ச்8

காலஞ்சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் திரு. சி. என் அண்ணாதுரைக்கு ஆந்திரப் பிரதேச மேல் சட்டசபையில் இன்று அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. அனுதாபத் தீர்மானத்தை ஆந்திரமுதலமைச்சர் திருபிரம்[illegible]

## 9 வாரச்சிறையும் அபராதமும்

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை வேதநாயகம் என்பவர் சட்டவிரோதமாக வடிசாராயம் வடித்தாரென முல்லைத்தீவு கலால் பரிசோதகர் திரு. கே. பி. திசநாயகாவால் தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ள முல்லைத்தீவு நீதிபதி திரு. ஆர். நவரத்தினம் எதிரிக்கு ரூபா 225/- அபராதம் விதித்து தீர்ப்[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...தினசரி' ஆகியவை எழுதிய சோவியத்எதிர்ப்புத்தலையங் கங்களில் ஒரு பகுதி பின்வருமாறு:-

மார்ச் 2-ந் திகதி, சீனாவின் ஹெய்லுங்கியாங் மாகாண உஸ்ஸுறி நதியில் சென்பாஓ தீவிற்குள் ஊடுருவல் செய்து, சீன மக்கள் விடுதலைச் சேனையின் எல்லைப்புற காவற்படையினர் மீது பீரங்கி, துப்பாக்கி பிரயோகம் செய்து, அவர்களில் அநேகரைக் காயப்படுத்தி, கொன்று குவிப்பதற்கு சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் ஆயுதம்தாங்கிய படைவீரர்களை அனுப்பியது. சோவியத் திரிபுவாதிகளால் நடத்தப்பட்ட எல்லையற்றளவு பாரதூரமான எல்லைப் பிரதேச ராணுவ ஆத்திரமூட்டலாகவும், அவர்களால் உருவாக்கப்பட்ட ஒரு வெறித்தனமான சீன எதிர்ப்பு சம்பவமாகவும் இதுஇருப்பதுடன், சமூக ஏகாதிபத்தியமான சோவியத் திரிபுவாதத்தின் கொடியதன்மையின் மற்றுமொரு பெரும் அம்பலமாகவும் இருக்கின்றது. சோவியத் திரிபுவாதத்துரோகக் கும்பலினால் புரியப்பட்ட மலைபோன்ற இந்தக் குற்றத்தில் சீன மக்களும், சீன மக்கள் விடுதலைச் சேனையும் பெரும் கோபத்தையும் வெறுப்பையும் தெரிவிப்பதுடன் அதற்கு எதிராக வன்மையான ஆட்சேபத்தையும்தெரிவிக்கின்றார்கள்.

இந்தப் பாரதூரமான ராணுவ ஆத்திரமூட்டலின் எல்லைப்புறச் சம்பவம் சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பலினால் ஏற்கனவே பூரணமாகத் திட்டமிட்டு வேண்டுமென்றே உருவாக்கப்பட்டது. யுஸ்ஸுறிநதியிலுள்ள சென்பாஓ தீவு சீன ஆட்சி அதிகாரத்தின் கீழுள்ள பிரதேசமாக இருக்கின்றது. எமது சொந்தப் பூமியைக் காவல் காப்பதற்கு எல்லைப்புறக் காவற்படையினருக்கான புனிதமான உரிமையாக அது இருக்கின்றது. அப்படியிருந்தும், சீனாவின் பிரதேசத்திற்குள் ஊடுருவல் செய்து எமது காவற்படை மீது தாக்குவதற்குப் பெருந்தொகை ஆயுதம்தாங்கிய படையினர்களையும், கவச மோட்டார்களையும், மோட்டார் வாகனங்களையும் சோவியத் திரிபுவாத அதிகாரிகள் அனுப்பிவைத்தனர். எமது எல்லைப்புற காவற்படையினர், சோவியத் திரிபுவாதிகளின் எல்லைப்புறத் துடுப்புகளுக்குத் திரும்பத் திரும்ப எச்சரிக்கைகளைக் கொடுத்தனர். ஆனால் அது எதுவித விளைவையும் உண்டாக்கவில்லை. தமது பொறுமையின் எல்லைக்குச்சென்றுவிட்டபொழுது

...பட்டு, ஆத்திரமூட்டலைச் செய்த ஊடுருவல்காரர்களுக்குப் போதியளவு தகுந்த தண்டனையைக் கொடுத்து, சீனாவின் புனித பிரதேசத்தை வெற்றிகரமாகப் பாதுகாத்தனர். சீனா முழுவதிலுமுள்ள படைவீரர்களும் பிரஜைகளும், தாய்த் திருநாட்டின் ஆதிக்கத்துக்குட்பட்ட பிரதேச ஆட்சியுரிமையைப்பாதுகாப்பதில் வீரமிக்க எல்லைப்புற காவற்படையினரின் நியாயமான நடவடிக்கைக்குத் தமது மிக உறுதியான ஆதரவைக் கொடுப்பதற்குச் சபதமேற்றுள்ளார்கள்.

நாம் தாக்கப்படும்வரை தாக்கமாட்டோம், நாம் தாக்கப்பட்டால். நிச்சயமாக நாம் பதிலுக்குத் தாக்குவோம். ஏனையோரால் சீன மக்கள் கொடுமைப்படுத்தப்பட்ட நாட்கள் மலையேறிவிட்டன. ஜார் ரஷ்யாவின் பழைய தந்திரங்களை மேற்கொள்வதன்மூலம் மகத்தான சீன மக்களுடன் நீங்கள் பேரம் பேசமுடியும் என்று எண்ணினால் நீங்கள் வெறும் குருடர்களாகவும், பகல் கனவு காண்பவர்களாகவுமிருக்கின்றீர்கள். ராணுவ ஆத்திரமூட்டல் செய்வதை நீங்கள் தொடர்வீர்களானால் நிச்சயமாக கடுமையான தண்டனையைப் பெறுவீர்கள். எவ்வளவு பலத்துடனும், யாருடனும் நீங்கள் வந்தாலும் பரவாயில்லை. நாங்கள் உங்களை நிச்சயமாக உறுதியுடன் முற்றுமுழுதாக, பூரணமாக அறவே ஒழித்துக்கட்டியே தீருவோம்.

—

## மதுரையில் யாழ்ப்பாணத்தவர்

### வில்லிசை

மதுரை, மார்ச் 8

யாழ்ப்பாணம் வேலணையைச் சேர்ந்த திரு. சபா சதாசிவம் ''பிட்டுக்கு மண் சுமந்த பேரருளாளன்'' என்ற தலைப்பில் கடந்த 2-ந் திகதி மதுரை ஸ்ரீ மதன கோபாலசுவாமி கோவிலில் வில்லிசைக்கச்சேரி நடத்தினார்.

மதுரை ஆதீனம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை யாழ்ப்பாணம் ஸ்ரீ மத் சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் ஒழுங்கு செய்திருந்தார். வில்லிசை நிகழ்த்திய திரு. சபா. சதாசிவம், சாந்தூர் திரு. ச. பா. பிச்சைக்குட்டியின் மாணாக்கராவார்.

32,68,090 சதுர கிலோ மீட்டர். இத் தகவல்களை இந்திய ராஜ்ய சபையில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ்சிங் வெளியிட்டார்.

—

## இதுவரை 10 பேர் பலி

ராவல்பிண்டி, மார்ச் 8

பாகிஸ்தானில் அயூப் ஆட்சிக்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின்போது இதுவரையில் ஏறத்தாழ 100 பேர் பலியாகியிருப்பதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில்பலஇடங்களில் மேலும் குழப்பங்கள் நிகழ்ந்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன. நேற்றும் அதற்கு முன் தினமும் ஜமால்பூர் பகுதியில்5 பேர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கராச்சியில் கொள்ளையடித்தலும் தீயிடலும் இடம்பெற்றுள்ளது. 2 பேர் கொல்லப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

—

ஈராக்கில்

## இருவர் விடுதலை

பாக்தாத், மார்ச் 8

ஈராக்கின் பொருளாதார இரகசியங்களை வெளி நாடுகளுக்கு வெளியிட்டதாக 4 பேர்மீது குற்றஞ்சாட்டி தொடரப்பட்டிருந்த வழக்கில் இருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மற்ற இருவரும் பிரதானக் குற்றச்சாட்டின்மீது விடுதலையளிக்கப்பட்டாலும் வேறு குற்றங்களுக்காக மூன்றாண்டு கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இவர்களுக்கு மரண தண்டனை விதிக்கும்படி முடிக்குரிய தரப்பில் கோரப்பட்டிருந்தது.

—

## இலங்கையருக்கு திறமைப் பரிசு

லண்டன், மார்ச் 8

இங்கிலாந்திலுள்ள ராயல் ரணசிகிச்சை கல்லூரி சமீபத்தில் நடத்திய பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற இலங்கையரான டாக்டர் பி.சி.ஏ ரணதுங்காவிற்கு அக்கல்லூரியின் ஹலட் பரிசு வழங்கப்பட்டது.

சேர். பிரெட்டிக் ஹலட்டின் பெயரில் வழங்கப்படும் இந்தப் பரிசு உடலியல், உடற்கூற்றியல், நோயியல் பற்றிய துறைகளில் முதல் தடவையாக பூர்வாங்கப் பரீட்சையில் சிறந்த சித்தி பெறுபவர்களுக்கு கொடுக்கப்படுகிறது.

ஹைதராபாத், மார்ச் 8

காலஞ்சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் திரு. சி. என் அண்ணாதுரைக்கு ஆந்திரப் பிரதேச மேல் சட்டசபையில் இன்று அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. அனுதாபத் தீர்மானத்தை ஆந்திரமுதலமைச்சர் திருபிரம்மானந்தரெட்டி. சமர்ப்பித்துப் பேசுகையில் திரு அண்ணாதுரை மக்களைக் கவரும் சிறந்த பேச்சாளர் என்றும் அண்டை ராஜ்யங்களுடன் நேசஉறவுடன்வாழும்பண்பு கொண்டவர் என்றும் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு பெரிதும் சேவைபுரிந்தவர் என்றும் குறிப்பிட்டார். அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்தும் நோக்கத்துடன்சபையில் ஒருநிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. அனுதாபத் தீர்மானம் நிறைவேறிய பின்னர் சபை கலைந்தது.

''சிங்களம் வாசிக்க தெரியாததால்

## திருப்பி அனுப்பப் பட்டனர்''

கொழும்பு, சனி

''இலங்கை ரோயல் விமானப் படைக்குத் தெரிவு செய்யப்பட்ட இருவர் சிங்களம் வாசிக்கத் தெரியாத காரணத்தால் பயிற்சிக்கு எடுக்கப்பட்ட பின்னர் தியத்தலாவலையிலிருந்து திருப்பி அனுப்பப் பட்டனர்'' என்று ஆட்சிமன்றத்தில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் கேட்ட கேள்வியொன்றுக்கு பிரதமர் பதிலளிக்கையில் இது பற்றி ஆராய்வதாகவும் வேலை நீக்கம் பற்றிக் கொடுக்கப்பட்ட விளக்கம் தமக்குத் திருப்தியளிக்க வில்லையென்றும் பிரதமர் சொன்னார்.

—

## பயன் தரும் பலாக்காய்

பம்பலப்பிட்டி, சனி

இரத்தினபுரியில் இருந்து வந்த விவசாயி ஒருவர் புதனன்று ஆட்சிமன்றத்தில் அமைச்சர்கள், ஆட்சிமன்ற அங்கத்தவர்கள் ஆகியோர் மத்தியில் மிக விரைவாகப் பயன் தரக்கூடிய பலாமரங்கள் பயிர் செய்வது பற்றி விளக்கினார். அவோசிங்கோ வெட்பசிங்கி என்ற இந்த விவசாயி அதிக பலாமரங்கள் பயிரிடுவதன் மூலம் நாடு உணவுற்பத்தியில் தன்னிறைவு பெறச் செய்யலாம் எனக் கூறி 18 மாதங்களில் பயன் தரக்கூடிய பலா விதைகளை ஆட்சிமன்ற அங்கத்தவர்களுக்கும் அமைச்சர்களுக்கும் விநியோகம் செய்தார்.

...யடித்தாரென முல்லைத்தீவு கலால் பரிசோதகர் திரு. கே. பி. திசநாயகாவால் தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ள முல்லைத்தீவு நீதிபதி திரு. ஆர். நவரத்தினம் எதிரிக்கு ரூபா 225/- அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். தன்னிடம் அபராதம் செலுத்தப் பணமில்லையென்று எதிரி தெரிவித்ததைத் தொடர்ந்து நீதிபதி எதிரியை ஒன்பது கிழமை சாதாரண சிறைவாசம் செல்லுமாறு தீர்ப்பளித்தார்.

முல்லைத்தீவு நாயாற்றைச் சேர்ந்த வர்ணகுலசூரிய வில்லியம் பெர்னாண்டோ என்பவருக்கும் இதே குற்றச்சாட்டின் பெயரில் நீதிபதி திரு. ஆர். நவரத்தினம் ரூபா 225/- அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

—

## மோசடி வழக்கு

குரும்பசிட்டி, சனி

அராலி தெற்கு வாசியான செல்லப்பா மார்க்கண்டு லைசென்ஸ் இன்றி சீட்டு நடத்தி, ஏ. பாலசிங்கநாயகம், எஸ். இளையதம்பி, ஆர் மாணிக்கம் ஆகியோரிடமிருந்துமுறையே ரூபா1150 ரூபா570, ரூபா150 மோசடி செய்ததாக யாழ்ப்பாணம் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது எதிரி தமது குற்றத்தை ஒப்புக்கொண்டு மூவரின் பணத்தொகையையும் செலுத்தினார். பொலிஸ் சார்ஜண்ட் ஏ. சப்ரமாது வழக்கை நடாத்தினார். நீதிபதி எதிரியைப் பற்றி நன்னடத்தை பாதுகாவலரின் அறிக்கை சமர்ப்பிக்க கோரி மீண்டும் எதிரியை இம்மாதம் 22-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

—

## உதவி விவசாய அமைச்சர் யாழ். ஐயம்

யாழ்ப்பாணம், சனி

உதவி விவசாய அமைச்சர் திரு. பி. ஸி. இம்புலான இவ்வாரக் கடைசியில் வடபகுதிக்கு விஜயம் செய்யவிருக்கின்றார்.

வடபகுதி விவசாயத் தோட்டங்கள் உப உணவு உற்பத்தி நிலையங்கள்விவசாயத்துக்குரிய தரிசு நிலங்களைப்பார்வையிடவே இவர் இந்த விஜயத்தை மேற்கொள்கின்றார்.

[கா. நி]

...வுக்கு போயிற்று. அப்பொழுது தாய்க் கலத்தில் ஒருவர் மட்டுமே இருந்தார். சுமார் ஆறு மணி நேரம் சந்திரக்கலம் தனியாகப் பிரிந்து இருந்தது.

மனிதன் சந்திரனில் இறங்குவதற்கு இப்படியான ஒரு கலத்தில்தான் போய் இறங்குவான். அதன் கார...

...விண்வெளி வீரர்கள் மூவரும் தற்பொழுது பூமியைச் சுற்றிவலம் வந்து கொண்டிருக்கிறார்கள். தமது பத்துநாள் பிரயாணத்தையும்முடித்துக்கொண்டு அவர்கள் பூமிக்குத் திரும்புவதற்கு முன் மேலும் பல சோதனைகளை நிகழ்த்துவார்கள்.

—

# அரைமணி நேரத்துக்குள் 3 சைக்கிள்கள் திருட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

அரை மணித்தியாலத்துக்குள் மூன்று சைக்கிள்கள் களவாடப்பட்டனவாம். பொலிஸாரின் நிரந்தர காவலுடன் இருக்கும் யாழ்ப்பாணத்திலுள்ள 'பாங்க்' ஒன்றிற்கு முன்னாலேயே இக்களவு நடைபெற்றதாக பொலிஸில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 10 மணியிலிருந்து 10-30 மணிக்கிடைப்பட்ட அரை மணி நேரத்துக்குள்ளேயே் மூன்று சைக்கிள்களும் இந்த 'பாங்க்' வாசலிலிருந்து களவாடப்பட்டதாக பொலிஸ் புகார்களிலிருந்து தெரியவந்துள்ளது.

சுமார் ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ள மூன்று சைக்கிள்களும்'பாங்க்'கிற்கு பணம் செலுத்த வந்த மூவருடையதாகும். சைக்கிள்கள் எதுவும் இன்னமும் மீட்கப்படவில்லை.

பொதுமக்களுக்கு பொலிசாரால் விடுக்கப்பட்டுள்ள செய்தியொன்றில் சைக்கிள்களுக்கு சாதாரண பூட்டுக்கள் போடவேண்டாமென்றும், சங்கிலிப் பூட்டுக்களையே போட்டு, சைக்கிள்கள் களவு போவதைத் தடுக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (கா. நி.)

—

## இளைஞர் புகார்

குரும்பசிட்டி, சனி

கந்தரோடையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் செய்துள்ள புகார் ஒன்றில் திடீர் என ஐயோ எனக் குளறியசத்தம் கேட்டு வீட்டின் பின்புறம் சென்று பார்த்தபோது தமது தாயாரை ஒரு கையில் கத்தி வைத்திருந்தவாறு மற்றைய கையினால் ஐயாச்சாமி என்பவர் தாயாரின் தலை முடியைப் பிடித்து இழுத்தவாறு நின்றார் என்றும் இவருக்கு அருகில் இவரது மகனும் நிற்கக் காணப்பட்டார் என்றும் தெரிவித்துள்ளார்.

இப்புகார் சம்பந்தமாக பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

## இளைஞர் தற்கொலை

யாழ்ப்பாணம், ஞாயிறு.

அண்ணன் கண்டித்ததைத் தாங்கமுடியாது மனவேதனையடைந்த தம்பி ஒருவர் நச்சுத் திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டாராம்.

இந்தப் பரிதாப சம்பவம் யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியில் நடைபெற்றது. செந்தில் சபாநாதன் என்ற 16 வயது வாலிபரே இவ்வாறு மரணமானவராவார்.

கல்லூரிமாணவனான மரணமானவருக்கு, தொழில்நுட்பக் கல்லூரியில்சேர அனுமதி கிடைத்ததாகவும், ஆனால் அண்ணனின் கண்டிப்பால் மனவேதனையடைந்ததாலேயே இவர் தற்கொலை செய்திருக்க வேண்டும் எனவும் விசாரணையின் போது தெரிய வந்தது.

விசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு என். இராசநாயகம் தற்கொலை என்று தீர்ப்பளித்தார். கா. நி.

## தற்கொலை

உடுத்திரபுரம், சனி

உடுத்திரபுரம் 10-ம் வாய்க்காலில் இருக்கும் வே. செல்லன் என்பவரின் மனைவி சின்னப்பிள்ளை என்பவர் கணவனுடன் கோபித்துக்கொண்டு நஞ்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார். திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் மரண விசாரணை நடத்தி தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

## தற்காலிக மாஜிஸ்திரேட்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் முடிக்குரிய வழக்கறிஞரான திரு. எஸ். கனகரத்தினம் இன்று ஊர்காவற்றுறைநீதிமன்றத்திலும், நாளையிலிருந்து 11ம் திகதிவரை யாழ்ப்பாணம் நீதிமன்றத்திலும் தற்காலிக மாஜிஸ்திரேட்டாகக் கடமையாற்றுவார். (கா.நி.)

...ஆண்டுக்குரிய நெற்காணி வரியை இதுவரை செலுத்தாதவர்கள் மீது நீதிமன்ற மூலம் நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாணம் கமத்தொழில் ஆணையாளர் அராலி தெற்கு-கிழக்கு பயிர்ச்செய்கைக்குழு காரியதரிசிக்கு அறிவித்துள்ளார். 1964-1968-ம் ஆண்டுவரை பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டதால் அவ்வாண்டுகளில் வரியைக் குறைத்து அறவிடுவதென பயிர்ச்செய்கைக்குழு ஏற்கனவே தீர்மானித்திருந்தது. அதைக்கூட செலுத்தவில்லையே யென ஆணையாளர் தெரிவித்துள்ளாராம்.

—

## பிரயாணிகள் புகார்

யாழ்ப்பாணம் சனி

பருத்தித்துறை இ போ ச பஸ் சேவை மிகவும் சீர்கேடாகவுள்ளதாம். பருத்தித்துறைக்கு உடுப்பிட்டி ஊடாக எட்டு பஸ்சேவை போடப்பட்டிருந்தும் இப்போது இரண்டு நாட்களாக மூன்று சேவை மட்டும்நடைபெற்று வருவதாகவும் இதனால் மக்கள் பெரும் கஷ்டப்படுகிறார்களென்றும் பிரயாணிகள் இ போ ச முகாமையாளரிடம் புகார் செய்துள்ளனர்.

(ந. நி.)

—

## துன்னாலை கி.மு.ச. கூட்டம்

உடுப்பிட்டி, சனி

துன்னாலை தெற்கு கிராம முன்னேற்றச்சங்கக் கூட்டம் திரு. வே. முத்தையா தலைமையில் நடைபெற்றது. கிராம முன்னேற்ற அதிகாரி பேசுகையில், நாட்டின் முன்னேற்றம் இவ்வித சங்கங்களின் வளர்ச்சியிலும், மக்களின் ஒத்துழைப்பிலுமே தங்கியுள்ளது என்று கூறினார். சங்கக் காரியதரிசி நன்றி கூறினார்.

## தற்கொலைசெய்ய முயற்சித்தாராம்

யாழ்ப்பாணம், சனி

தற்கொலைசெய்ய முயற்சித்த இளம் பெண் ஒருவர் பொலிஸ் பாதுகாப்புடன் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலி வடக்கு உறுப்பலத்தைச சேர்ந்த செல்வி பாலு தவமணி (வயது 20) என்பவரே தற்கொலை செய்ய முயற்சிசெய்தவராவார்.

தாயார் இவரை ஏசியதால் இவர் நச்சுத்திராவகம் அருந்திதற்கொலை செய்ய எத்தனித்ததாக பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

(ந.நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணி வாக்கு

'மோசமான நிலைமை ஏற்படப்போகிறது என்றிருந்தால் அப்போது ஒரு நல்ல காரியத்தைச் செய்வதன் மூலம் அந்நிலைமை ஏற்படாதபடி தடுக்க முடியும். இது நாம் அனுபவ பூர்வமாகக் காணும் உண்மை.'

— மகாத்மா காந்தி.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: ''EELANADU'' Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், இலக வருஷம் மாசிமாதம் 26-ந் திகதி
(9 - 3 - 69)

## காணி மதிப்பீடும் வரி உயர்வும்

விலை மதிப்பிட்டாளர்களால் யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் உள்ள வீடு, வளவு, காணிகள் மதிப்பிடப்பட்டதன் அடிப்படையில் கணிக்கப்பட்ட வரி விகிதம் ஏற்றத்தாழ்வு உடையதாக இருக்கிறது. பொதுவாக வரி பெருமளவில் அதிகரித்திருக்கிறது. சில இடங்களில் நூற்றுக்கு இருநூறு வீதம் கூட உயர்ந்திருக்கிறது ஒரு கந்தாயத்துக்கு ஆறு ரூபாய் எழுபது சதம் செலுத்திவந்த ஒரு வீட்டுக்காரர் அந்த வீட்டில் எதுவித மாறுதலுமில்லாதிருக்கையில் புதிய வரி விகிதப்படி பதினெட்டு ரூபாய் அறுபது சதம் வரியாகச் செலுத்த வேண்டிய நிலையிலிருக்கிறார். விலைமதிப்பீட்டாளர்கள் எந்த அடிப்படையில் விலைகளை மதிப்பிட்டுள்ளனர் என்பது தெரியவில்லை. என்றாலும் நியாயமற்ற முறையில் வரி உயர்த்தப்பட்டிருந்தால் அதை ஆட்சேபித்து மனுச்செய்யலாமென்றும் மாநகரசபை அங்கத்தவர்களைக்கொண்ட ஓர் உபகுழு மதிப்பீட்டிலாகா அதிகாரி ஒருவரின் உதவியுடன் இவற்றைப் பரிசீலனை செய்து நியாயம் வழங்குமென்றும் மேயர் தெரிவித்திருப்பது சற்று ஆறுதலளிப்பதாகும்.

வரி, அது எந்த வரியாக இருந்தாலும் அதிகரிக்கப்படுவதை மக்கள் விரும்புவதில்லை; விரும்பவும் மாட்டார்கள். அதற்காக வரிகளே விதிக்கப்படாமல் விடுவதில்லை; விடவும் முடியாது. ஆனால்வரிவிதிப்பில், நேற்று முன்தினம் மாநகரசபைக் கூட்டவிவாதத்தில் உதவி மேயர் குறிப்பிட்டதுபோல, அன்றாட வாழ்க்கைக்கே அல்லல்படும் ஏழை எளிய மக்களிடமிருந்து ஒரு சதமேனும் வரி அறவிடாமல் வசதியுள்ள செல்வந்தர்களிடமிருந்து தாராளமாக வரி அறவிடலாம். நாட்டின் முன்னேற்றத்துக்கும் நகரின் அபிவிருத்திக்கும் பணம் தேவை. இந்தப் பணத்தை வரிகள் மூலம் தான் தேடமுடியும். இதற்காக கஷ்டப்படும் ஏழை மக்களை மேலும் மேலும் கஷ்டப்படுத்தாத முறையில் வரி விதிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டும். யாழ்ப்பாண நகர மக்களின் தேவைகள் அதிகம். சுகாதாரம், குடிதண்ணீர், மின்சாரம் ஆகியவைகள் மட்டுமல்ல மேயர் கூறியதுபோல ஏழைப்பிள்ளைகளுக்கு இலவசபாடப் புத்தகங்கள் வழங்குவது, ஏழை மாணவர்ஐவருக்கு பல்கலைக்கழகப்படிப்புக்கு உபகாரச் சம்பளம் வழங்குவது முதலான மற்றும் பல சேவைகளையும் மாநகரசபை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. இதற்குப் பணம் தேவை.

விலைமதிப்பீடு செய்வதற்கு யார் எப்பொழுது ஏற்பாடு செய்தார்கள் என்பது பற்றியோ, விலைமதிப்பீட்டாளர்கள் சரியாக நடந்துகொண்டார்களா, இல்லையா என்பதைப்பற்றியோ, புதிய வரி விகிதம் அமுல்செய்யப்பட வேண்டுமா, கூடாதா என்பதைப்பற்றியோ சர்ச்சை செய்து கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அதனால் யாருக்கும் நன்மையுமில்லை. நியாயமற்ற முறையில் வரி விதிக்கப்பட்டிருந்தால் அதைத்திருத்தி நியாயம் வழங்குவதற்கு மேயரும் மற்றும் அங்கத்தவர்களும் முன்வந்துள்ளதால் அவர்களெல்லோரும் ஒத்துழைத்து தகுந்த முயற்சி செய்வது மக்களுக்கு ஆறுதல்கிடைக்கும்.

## ஆசிரியர் இடமாற்றம்

ஆட்சிமன்றத்திலே - - - - - - - - நமது நிருபர் பெரி. சுந்தரலிங்கம்

# பல நாடுகளின் பின் ஆட்சி மன்றத்தில் தமிழ் ஒலித்தது

## ஓட்டிப்பேசினார் பண்டிதர் வெட்டிப்பேசியது வவனியா



வாழைப்பழத்தில் ஊசி ஏற்றினால் போல விஷமத்தனமாக விஷயங்களை வெளியிடுவதிலே நொப்பே பிரதிநிதி திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா வீரர் தான்! ஆட்சி மன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் திடீரென ஏதாவதொரு கருத்தை வெளியிட்டு, தனது சக கட்சிகளான கம்யூனிஸ்ட், சமசமாஜிச் கட்சிகளுக்கு கசப்பான அனுபவங்களை ஏற்படுத்திக்கொடுத்துவேடிக்கை பார்ப்பவர் என்று பெயர்பெற்றவர்.

சாட்சாத் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகாதான் இன்றைய ஆட்சிமன்றக் கூட்டத்தின் இறுதிக்கட்டத்தில் திடீரெனவந்து, முன்னாள் உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வத்தைப்பற்றியும் அவரது அமைச்சரவைக் காலத்தில் வடக்கு கிழக்கு மாகண உள்ளூராட்சி அமைப்புகளுக்கே நிதியை அள்ளி அள்ளிக் கொடுத்தார் என்று குற்றஞ்சாட்டி அமைதியாக இருந்த அமிர்தலிங்கத்தை துள்ளி எழச் செய்தார்.

அமைச்சர் திருச்செல்வம்

''1965-ம்; 66-ம் 67-ம் ஆண்டுகளில் திரு திருச்செல்வம்உள்ளூராட்சிஅமைச்சராக இருந்தபோது வடக்குகிழக்கு மாகாணங்களுக்கே கிணறு வெட்ட நிதி உதவிகள் அளித்தார். 66-ம் ஆண்டில் மட்டும் சுமார் 8 லட்ச ரூபாய் பணத்தை வடக்குமாகாணத்தில் வீடு வசதிகள் செய்து கொடுப்பதற்காக வாரி வழங்கினார்'' என்று குற்றம் சாட்டிவிட்டு, ''இதனையெல்லாம் அப்போது உதவியமைச்சராக இருந்த இப்போதைய உள்ளூராட்சி அமைச்சர் வன்மையாக எதிர்த்திருக்கிறார். வேண்டுமானால் அவரையே கேட்டுப்பாருங்கள் என்று சும்மா கிடந்த சங்கைஊதிக் கெடுத்தகதையாக உட்கார்ந்துவிட்டார் திரு.பிலீக்ஸ் டவஸ் பண்டாரநாயகா

தனி உறுப்பினர்நாளான இன்று கிரியெல்லை எம்.பி. திரு. எஸ். பி.ஹெரத் குறைந்த வருமானமுடைய கிராமச பைகளுக்கு கூடுதலான உதவிப்பணம் வழங்க வேண்டும் என்று கோரும் பிரேரணையொன்றைக் கொண்டுவந்தார். இந்தசந்தர்ப்பத்தைத் தக்க முறையில் பயன்படுத்தித் தான் கிள்ளிவிட்டு வேடிக்கை பார்க்கும் வித்தையில் இறங்கினார். அதில் கைதேர்ந்த திரு. பீலிக்ஸ் டயஸ்.

இதற்கு முன் கிளிநொச்சி எம்.பி. திரு கா.பொ. இரத்தினம்கொண்டுவந்த 4பிரேரணைகள் மீதுதான் நாள் முழுவதும் விவாதம் நடைபெற்றது.

### பண்டிதரின் பிரேரணைகள்

O கல்விகலாச்சார, விவசாய அமைச்சின் நிரந்தரச் செயலாளர்' .கல்வி மகா அதிபதி ஆகிய பதவிகள் உடனடியாக பிரித்து வேறாக்கப்படவேண்டும்.

O தற்பொழுதுள்ள இரண்...

இரத்தினம் 'தமிழ்ப்புத்தகங்களின் அடக்கவிலை அதிகமாக இருப்பதற்குக் காரணம், கல்வித்திணைக்களத்தின் தமிழ்ப்பிரிவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தார்களின் தகைமையின்மைதான். என்ற கருத்துப் பட பேசினார்.



வவனியா தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதி சிவசிதம்பரம் அடுத்துப் பேசியபோது திணைக்கள முதல்வர்களின் தகைமைகள்பற்றி ஆட்சி மன்றத்தில் பேசுவது அழகல்ல என்று நாசூக்காகப் பண்டிதரைச் சாடியதோடு மட்டும் நிற்காமல், செனட்சபையில் திரு. டொரிக்டீசூசா, தமிழ்ப்பாடப் புத்தகங்களின் விலையைக் குறைக்க வேண்டுமென்று பிரேரணை கொண்டுவந்தபோது அப்போது அமைச்சராக இருந்த செனட்டர் திருச்செல்வம் உட்பட தமிழரசுக்கட்சிச் செனட்டர்கள் அப்பிரேரணையை ஆதரிக்காததையும் குத்திக்காட்டி அது...

திரு. கா. பொ. இரத்தினத்தின் பிரச்னைகள் நான்கும் ஒருவாறு ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட பின், 'குறைந்த வருமானமுடைய கிராமசபைகளுக்கு கூடுதலான உதவிப் பணம் வழங்க வேண்டும்'' என்னும் பிரேரணை விவாதத்திற்கெடுத்துக் கொள்ளப்பட்டபோதுதான் பீலிக்ஸ் புகுந்தார்; புதுத்திருப்பத்தை உண்டுபண்ணினார்.

உள்ளூராட்சி அமைச்சராக திரு. திருச்செல்வம் இருந்தபோது, அவருக்குப் பிடித்தமானவடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்களை இரகசியமாக வீட்டுக்கு அழைத்து, குசுகுசு கூட்டங்கள் நடத்தி அவர்களுக்கு தேவையான நிதிகளை ஒதுக்கிக்கொடுத்தார்.'' என்று ஆரம்பித்து

1966-ம் ஆண்டிலே மட்டும் நாடெங்கும் உள்ள உள்ளூராட்சி அமைப்புகளுக்கென ஒதுக்கிய 8 லட்சம் ரூபாயை வடக்கு மாகாணத்திற்கு மட்டுமே செலவிட்டார். இதனை அப்போது உதவி அமைச்சராக இருந்த இப்போதைய அமைச்சர் ஏற்றுக்கொள்ளாது...

டாட், மார்ச்.9

கிழக்கு ஜெர்மனியும் சோவியத்யூனியனும் கூட்டாக நடத்திய ராணுவ ஒத்திகைகள் முடிவுற்றிருக்கின்றன, மேற்கு பெர்லினில் மேற்கு ஜேர்மன் அதிபர் தேர்தல் நடைபெற்ற அதே வேளையில் இந்த ராணுவ ஒத்திகையும் நடைபெற்றது.

### நயினாதீவுக்கு ரூபா 25,000

நயினாதீவு, சனி

நயினாதீவு கிராமசபையில் உள்ள குழாய் நீர் விநியோகத்தை விஸ்தரிப்பதற்கு உள்ளூராட்சி அமைச்சு ரூ. 25,000 நன்கொடை வழங்கியுள்ளது. அண்மையில் உள்ளூராட்சி அமைச்சர் நயினாதீவுக்கு விஜயம் செய்தபோது கிராமசபை இது பற்றி கோரியிருந்தது.

# சொல்லம்புகள்

கா. பொ. இரத்தினம் (கிளிநொச்சி):-



பாடசாலைக்கே போய்ப் பார்க்காதவர்கள் கல்விப் பணிப்பாளர்நாயகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

0 0 0

செ. இராசதுரை: (மட்டக்களப்பு) கல்வி அமைச்சில்தினசரி தேர்த்திருவிழாபோன்று ஒரே கூட்டம்தான். பாராளுமன்ற உறுப்பினர்கள், செனட்டர்கள், உதவி அமைச்சர்கள், ஆசிரியர்கள், பெற்...

...ருப்பது அவரது அலட்சியனப்பான்மையைத் தான் பிரதிபலிக்கிறது.

திரு. பிரின்ஸ் குணசேகரா (ஹபரதுவ) : தமிழில்-இந்த அரசாங்கம் எல்லாம் அப்படித்தான்.

திரு. அமிர்தலிங்கம்: (வட்டுக்கோட்டை) தமிழ் பாடப்புத்தகங்களுக்கு மட்டும் அதிக விலை விதித்திருப்பது தமிழ் பேசும் மக்களின் குழந்தைகளாகப் பிறந்த பாவத்திற்காக அவர்களுக்கு விதிக்கப்பட்ட அபராதம் தான்!

0 0 0

திரு. பிரின்ஸ் குணசேகரா (ஹபரதுவ): கல்வி அமைச்சரை இன்று வட்டுக்கோட்டை பிரதிநிதிவன்மையாகக் கண்டிக்கிறார். ஆனால் அவர் மீது நம்பிக்கையில்லாத்...

### ஐயாறன் எழுதுவது

நேற்று ஓர் ஆசிரியர் வந்து ஒரு குறையைத் தெரிவித்தார். ''சியவஸ'' என்று கல்விப் பகுதியினர் நடத்தும் ''லாட்டரி சீட்டு'' களை வாங்கி விற்கும்படி அவர்களை அதிபர்கள் கட்டாயப் படுத்துகிறார்களாம்.

அந்த ஆசிரியரின் வகுப்பில் பத்து மாணவர்தான் உண்டு. ஆனால் 100 டிக்கெட்டுகளைக் கொடுத்து விற்க வேண்டுமென்று வற்புறுத்தினாராம். அந்த சீட்டுகளுக்கான பணத்தை உடனே முன்னதாகக் கொடுக்க வேண்டுமென்றும், இல்லாவிடில், அந்த ஆசிரியரின் சம்பளத்திலிருந்து பிடித்துக் கொள்ள சம்மதிக்க வேண்டுமென்றும் கேட்டாராம் அதிபர்.

பாவம்! இந்த சீட்டுகளைத் தம்மால் விற்க முடியாதென்றும், மாணவர்கள் இதை வாங்க விரும்பவில்லை என்றும் அந்த ஆசிரியர் கூறியதற்கு, அப்படியே எழுதிக் கொடுக்கும்படி கேட்டாராம் அதிபர். 'நீங்களும் எழுதிக் கேட்டால், அதற்கு எழுத்தில் பதில் தருகிறேன்'' என்று தாம் கூறியதாகவும், வேறு பல ஆசிரியர்கள் இந்தச் சீட்டுகளை விற்க முடியவில்லை என்று திருப்பிக் கொடுத்ததாகவும் தெரிவித்தார் அவர்.

கல்லூரி அதிபர் ஏன் இப்படிக் கட்டாயப்படுத்த வேண்டுமென்று கேட்டதற்கு, மேலிடத்திலிருந்து அவரை வற்புறுத்துவதாகவும் அறிந்தேன். இப்போது ஆசிரியர்கள் எல்லோரும் அரசாங்க ஊழியர்கள் ''பேய்க்கு வாழ்க்கைப் பட்டால் புளியமரம் ஏறு'' என்று கூறுவதுண்டு. என்ன செய்வது!

வேறு எந்த நாட்டிலாவது, கல்விப் பகுதியினர், விழா நடத்துவதற்காக 'சுவீப்' என்ற சூதாட்டம் நடத்துகின்றனரா? எனக்குத் தெரிந்தவரை இல்லை.

இலங்கையிலே இலவசக் கல்வி அளிப்பதால், பெற்றோர்கள் ஏன் இந்தச் சீட்டுகளை வாங்கி, கல்விப்பகுதியினருக்கு உதவக் கூடாது என்று கேள்வி எழலாம். வாங்குபவர்கள் வாங்கட்டும். ஆனால் இதில் யாரையும் கட்டாயப் படுத்துவதுதான் கூடாத விஷயம்.

சென்றமுறை விற்காத டிக்கெட்டுகளுக்கான தொகையை கேக், மில்க டோபி முதலிய தின்பண்டங்களைச் செய்து மாணவர்களுக்கு விற்று அந்தப்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை; விடவும் முடியாது. ஆனால்வரிவிதிப்பில், நேற்று முன்தினம் மாநகரசபைக் கூட்டவிவாதத்தில் உதவி மேயர் குறிப்பிட்டதுபோல, அன்றாட வாழ்க்கைக்கே அல்லல்படும் ஏழை எளிய மக்களிடமிருந்து ஒரு சத

...வழங்குவதற்கு மேயரும் மற்றும் அங்கத்தவர்களும் முன்வந்துள்ளதால் அவர்க ளெல்லோரும் ஒத்துழைத்து தகுந்த முயற்சி செய்வது மக்களுக்கு ஆறுதல்கிடைக்கும்.

## ஆசிரியர் இடமாற்றம்

ஆசிரியர்கள் பற்றிய வழமையான இடமாற்றத் திட்டத்தைக் கைவிடுவதென கல்வி அமைச்சு தீர்மானித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. இது உண்மையானல் கல்வி அமைச்சுக்கு இப்போதாவது புத்திவந்திருக்கிறதேயென்று மகிழ்ச்சியடையலாம்.

ஆசிரியர்களின் இடமாற்றத்திஞல் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஏற்படும் வசதியீனங்களைத் தவிர்ப்பதற்காகக் கல்வி அமைச்சு இந்த முடிவைச் செய்திருப்பதாகவும் மாவட்ட ரீதியில் ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கான புதிய திட்டமொன்றைக் கல்வி அமைச்சு வகுத்துள்ளதாகவும் அந்தச் செய்தி கூறுகிறது.

முன்னேற்றமடைந்தபல நாடுகளில் கல்விப் பொறுப்பு அந்த மகாணங்கள், மாவட்டங்களின் நிர்வாகத்துக்குப் பொறுப்பான சபைகளிடமே விடப்பட்டுள்ளது. இதனல் ஆசிரிய நியமனங்கள், இடமாற்றங்கள் அந்தந்த மாகாணங்கள், மாவட்டங்களின் தேவைகளையும் நிலைமைகளையும் கவனித்து அதற்கேற்ப செய்யப்படுகின்றன. இதன காரணமாக ஆசிரியர்களோ, மாணவர்களோ வீணன கஷ்டங்களை அனுபவிக்கவேண்டியேற்படுவதில்லை; கல்வியும் அங்கு விருத்தியடைந்து வருகிறது.

இங்கு ''மாவட்டசபைகள்''தான் இல்லையென்றாலும் மாவட்ட ரீதியிலாவது ஆசிரிய நியமனங்கள், இடமாற்றங்கள் செய்வதாயின் பாராட்டவேண்டியதே. ஆனாலும் சமீபத்தில் இடமாற்றம் செய்யப்பட்டு ஆட்சேபனை தெரிவித்து அதிருப்தியுடன் பணியாற்றிவரும் ஆசிரியர்களுக்கு இன்னமும் நியாயம் வழங்கிய அவர்களைப் பழைய இடங்களுக்கே மீண்டும் மாற்ற கல்வி அமைச்சு முன்வருவது ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் மட்டுமல்ல கல்வி அமைச்சுக்குமே நல்லது.

### மரண அறிவித்தல்

உடுவில் பரிசுத்த செபமாலை மாதாகோவிலைச் சேர்ந்தவரும், ஆனைக்கோட்டையில் வசிப்பவருமான திரு. தானியே ஆசீர்வாதம் அவர்கள் 8-3-69 சனிக்கிழமை மத்தியானம் காலமாகினர்.

இவர் தானியேல் ஞானப்பிரகாசம் (காந்தி) திருமதிகள் மனேன்மணி ஞானமுத்து, செபமாலை பரிமளம் ஆகியோரின் சகோதரனும், திருவாளர்கள் பீற்றர் யோசேப் ஞானமுத்து, பறுனந்து செபமாலை, க. நேசராசா. க. சின்னராசா, க. சற்குணராசா க. தியாகராசா, க. வரதராசா, க. அருணகிரிராசா. க. பண்குணராசா ஆகியோரின் மைத்துனரும், திரு. நா. கந்தையா அவர்களின் மருமகனுமாவர்,

பிரேத அடக்கம் 9-3-69 ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு ஆனைக்கோட்டை அர்ச். அன்னம்மாள் கோவிற் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். 542

### வரி உயர்வு...

[2ம் பக்கத்தொடர்ச்சி]

கே. எஸ். நடராசா. அ. நடராசா.

பாதகமாக வாக்களித்தோர்:

திரு ஆ. துரைராஜசிங்கம் (துணைமுதல்வர்), அல்பிரட் துரையப்பா, ஏ. ஜி. ராஜசூரியர், அவிசுவநாதன், என் மார்க்கண்டு. தம்பு கந்தையா, ஏ. கர்தர், எம். ஜி. பஷீர், எம். எஸ். பேரின்பநர்யகம்.

இறுதியில் பிரதம வரி மதிப்பீட்டாளருக்குக் கொடுக்கவேண்டிய 26764 ரூபா 63 சதத்தையும் கொடுப்பதென 4 அதிகப்படியான வர்க்குகளால் தீர்மானிக்கப்பட்டது. (கா. நி)

### ஹர்த்தால்

ராவல்பிண்டி, மார்ச் 8

பாகிஸ்தானில் கராச்சியிலும், ராவல்பிண்டியிலும் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது கடைகள், வர்த்தக ஸ்தாபனங்கள் எல்லாம் மூடப்பட்டிருந்தன.

### பிரேரணைகள்

O கல்விகலாச்சார, விவசாய அமைச்சின் நிரந்தரச் செயலாளர்' கல்வி மகா அதிபதி ஆகிய பதவிகள் உடனடியாக பிரித்து வேருக்கப்படவேண்டும்.

O தற்பொழுதுள்ள இரண்டாம் தரத் தலைமையாசிரியர் பதவிகளை ஒழித்து விட்டு அவற்றைத் தற்போதுள்ள முதலாம் தரத் தலைமையாசிரியர் பதவியுடன் இணைக்க வேண்டும்

O கிளிநொச்சி, மன்னார், மூதூர் போன்ற பின்தங்கிய தேர்தல் தொகுதிகளைச்சேர்ந்த ஆசிரியர்கள் அவரவர் தேர்தல் தொகுதிகளிலேயே நியமிக்கக்வேண்டும்; பொது மாற்றத்திலிருந்து அவ்வாசிரியர்கள் விலக்கப்படவேண்டும்.

O கல்வித்துறை வெளியீட்டுத் திணைக்களத்திஞலும் கல்வித்திணைக்களத்திஞலும் தமிழில் வெளியிடப்படும் புத்தகங்களின் விலைகள் அதே பொருள்பற்றி சிங்களத்திலும் வெளியிடப்படும் புத்ததகங்களின் விலைகளுக்குச் சமமாக இருக்க வேண்டும்.

திரு. கா. பொ. இரத்தினம் கொண்டுவந்த இந்தநான்கு பிரேரணைகளும் ஏகமனதாக எதிர்கட்சியினராலும் ஆளும் கட்சியினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப் பட்டன, என்றாலும் கடைசிப் பிரேரணையான தமிழ்ப் பாடப் புத்தகங்களின் விலை பற்றிய பிரேரணை மீதுதான் எல்லாக்கட்சி எம். பிககளும் கலந்து கொண்டு நெடுநேரம் பேசினர்.

### காங்கிரஸ்- தமிழரசு 'உரசல்'

தமிழரசுக்கட்சி உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் கொண்டுவந்த பிரேரணைகளை, எதிர்க்கட்சிகளைச் சார்ந்த கம்யூனிஸ்ட் சமசமாஜி, ஸ்ரீலங்கா - கட்சி உறுப்பினர்கள் கூட மனமார வரவேற்றுப்பாராட்டி ஆதரித்துப் பேசினர்.

ஆனால், ''தமிழ்ச்சாதியே உன் தலைவிதி இதுதானே?'' என்று நொந்து கொள்ளத் தூண்டும் வகையில், தமிழரசுக்கட்சிக்கும், தமிழ்க்காங்கிரசுக்கும்இடையில் தமிழ்ப் பாடப்புத்தக விலைகுறைப்பு பற்றிய விவாதத்தின்போது நேரடி மோதல் ஏற்பட்டது என்று சொல்லமுடியாவிட்டாலும் - உரசல்-ஏற்பட்டது என்று சொல்லித்தான் ஆகவேண்டும்!

பிரேரணையைப் பிரேரித்துப் பேசிய திரு. கா. பொ. ...வேண்டுமென்று பிரேரணை கொண்டுவந்தபோது அப்போது அமைச்சராக இருந்த செனட்டர் திருச்செல்வம் உட்பட தமிழரசுக்கட்சிச் செனட்டர்கள் அப்பிரேரணையை ஆதரிக்காததையும் குத்திக்காட்டி அது

...உள்ளூராட்சி அமைப்புகளுக்கென ஒதுக்கிய 8 லட்சம் ரூபாயை வடக்கு மாகாணத்திற்கு மட்டுமே செலவிட்டார். இதனை அப்போது உதவி அமைச்சராக இருந்த இப்போதைய அமைச்சர் ஏற்றுக்கொள்ளாது

## சும்மாகிடந்த சங்கை ஊதிக்கெடுத்தார் பீலிக்ஸ்

எனக்கு மட்டுமல்ல; தமிழ் பேசும் இனத்திற்கே விசித்திரமானதாக இருந்தது! என்று எரிகிற கொள்ளியிலேஎண்ணெய்வார்த்தார்!

தமிழ்க்காங்கிரஸ் எம். பி. இப்படிப்பேசிஞல், தமிழரசுக்கட்சியினர் சும்மா இருப்பார்களா? ''எங்கள் கட்சி உறுப்பினர்கள் பிழையாக நடந்து கொள்ளவில்லை'' என்று மட்டக்களப்பு எம். பி. இராசதுரை விளக்கம் கூற, ''வவனியா எம். பிக்கு நான் பேசிய தமிழ் விளங்காததாலோ என்னவோ; தேவையில்லாதவற்றை எல்லாம் சொல்லிவிட்டார்'' என்று பண்டிதர் கா. பொ. இரத்தினம் மறுப்புரைத்தார்.

எதிர்க்கட்சியினரின் நகைப்புக்கு ஆளாகும் வித்தில் இப்படி ஒட்டியும் வெட்டியும் பேசிஞலும், தமிழிலேயே ராஜதுரை. ரத்தினம், சிவசிதம்பரம் ஆகியோர் பேசியது எத்தனையோ நாட்களுக்குப் பின் ஆட்சிமன்றத்திலே தமிழ் ஒலிக்க உதவியது!

### அமைச்சரின் அலட்சியம்

கல்வி அமைச்சைப் பற்றியே திரு. கா. பொ. இரத்தினத்தின் பிரேரணைகள் நான்குமே இருந்தும், கல்வி அமைச்சர் சற்றும் கவலைப்படாமல் அலட்சிய மனேபாவத்துடன் சபைக்கு வெளியே உரையாடிக் கொண்டிருந்தது திரு. அமிர்தலிங்கத்தின் ஆத்திரத்தை தூண்டிவிட்டதோடு வெறும் வாயை மென்றுகொண்டிருந்த எதிர்க்கட்சியினருக்கு அவல் கிடைத்தாற்போலாகிவிட்டது!

''இந்தச்சபையில் எது நடந்தாலும், யார் என்ன சொன்னலும், நான் கவலைப்படமாட்டேன்; நான் நினைத்தபடிதான் காரியம் சாதிப்பேன்; கருமமாற்றுவேன்!'' என்று கல்வி அமைச்சர் இரியகொல்லை நினைத்துக்கொண்டிருக்கிருர்என்று கோபம் கொப்பளிக்கப்பேசினர் - ஆங்கிலத்தில் அமிர்தலிங்கம்!

எதிர்ப்பு தெரிவித்ததோடு அமைச்சர் வீட்டில் நடத்தப்பட்ட இரகசியக் கூட்டங்கள் பற்றியும் எதிர்ப்பு தெரிவித்திருக்கிருர். வேண்டுமானல் அவரையே கேட்டுப்பாருங்கள். நான் சொல்வது உண்மையா பொய்யா என்று சொன்ஞர் திரு. பீலிக்ஸ்!

பீலிக்ஸ் கிளப்பிவிட்ட புரளியை மறுக்க இப்போது வெளியே இருந்த திரு. பிரேமதாசாவைக் கூட்டிவருமாறு பியோன்களைப் பணித்துவிட்டு, திரு. திருச்செல்வம் அவரது ஆட்சிக் காலத்தில் கேகாலைப்பகுதி உள்ளூராட்சி அமைப்புகளுக்கு எவ்வளவு உதவிகளை எப்படியெல்லாம் செய்தார் என்று உதவி சுகாதார அமைச்சர் திருமதி கன்னங்கரா நற்சான்றிதழ் வழங்கிஞர்.

அதன்பின் பேசிய உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாசா, பீலிக்ஸ் சொன்ன தகவல்களை ஆணித்தரமாக மறுத்ததோடு, 1966-ம் ஆண்டிலே 8 லட்ச ரூபாயை அச்சுவேலியில் அமைக்கப்பட்டிருக்கும் சிறுபான்மையினருக்கான வீடமைப்புத் திட்டத்திற்காகத்தான்ஒதுக்கிஞர். திரு. திருச்செல்வம் என்று விளக்கிவிட்டு, திரு. திருச்செல்வம் அவரது பதவிக்காலத்தில் செய்த மிக நல்ல சேவை இதுதான் என்று சொல்லி தமிழரசுக் கட்சியினரின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடச் செய்தார்.

யாழ்ப்பாண விஜயத்தின் போது தமிழரான திருச்செல்வம் அமைச்சராகஇருந்தும் தங்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்றுதான் அங்குள்ள தமிழர்கள் எல்லாரும் தன்னிடம் குறைபட்டார்கள் என்று தெரிவித்த திரு. பிரேமதாசா, ''இந்த நாட்டில் எதைச் செய்தாலும் சாதி, சமய, இன பிரதேச அரசியல் பேதம் பாராட்டாது செய்தால்தான் நாடும் நாமும் முன்னேற முடியும்'' என்று ஆணித்தரமாக அறிவித்தது உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாசாவுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்பதற்கு கட்டியங் கூறுவதாக இருந்தது.

0 0 0

செ. இராசதுரை: (மட்டக்களப்பு) கல்வி அமைச்சில்தினசரி தேர்த்திருவிழாபோன்று ஒரே கூட்டம்தான். பாராளுமன்ற உறுப்பினர்கள், செனட்டர்கள், உதவி அமைச்சர்கள், ஆசிரியர்கள், பெற்ருேர்கள் எல்லாரும் தினம் தினம் கால்கடுக்கத் தவம் நின்று அதிகாரிகளைக்கண்டு பேசவேண்டிய அவலநிலை ஏற்பட்டிருக்கிறது.

0 0 0

பி. வை. துடாவ [மாத்தறை]: வருஷத்தின் 365 நாளும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதிலே நேரத்தைப் பாழாக்கும், படுமோசமான இலாகாதான் கல்விஇலாகா!

0 0 0

டாக்டர் நாகநாதன் [நல்லூர்]: நான் ஆசிரியர் இடமாற்றங்களில் வழக்கமாகத் தலையிடுவதில்லை. மற்றவர்களைப்போல அமைச்சர்களின் பின்ஞலோ, இலாகாத் தலைவர்களின் பின்ஞலோ ஓடித்திரிவதில்லை எப்படியாவது இருந்தஇடத்திலேயே இருந்துவிட முயலும் ஆசிரியர்களுக்கு நான் உதவிசெய்வதேயில்லை. வடக்குமாகாணத்திற்கு வெளியேயும் தமிழ்ப் பிள்ளைகள் இருப்பதால் உங்கள் வசதிகளை மட்டுப்பார்த்தால் போதாது என்று சொல்லிவிடுவேன்.

0 0 0

திரு. தர்மதாசா [பெல்மதுள்ள]: கல்வித்துறையில் இப்போதுள்ள சீர்கேடுகளைக் களையவேண்டுமாஞல் இந்த அரசாங்கத்தைக் கவிழ்த்தால்தான் செய்துமுடிக்க முடியும்.

சபாநாயகர் [குறுக்கிட்டு]: அதற்கு நீர்வேருெருபிரேரணைகொண்டுவரவேண்டும்.

பி. வை. துடாவ (மாத்தறை): (கோரம்இல்லாமற்போகவே கோரமணிஅடித்துக்கொண்டிருக்கும்போது) 'இதில் ஏதோ சதித்திட்டம் இருக்கிறது போலிருக்கிறது.

சபாநாயகர்: [நேற்றைய சம்பவத்தை நினைவுபடுத்தி] சரி, சரி, சின்ன யுத்தத்தை ஆரம்பித்துவிடாதீர்கள்!

0 0 0

திரு. அமிர்தலிங்கம் [வட்டுக்கோட்டை]:-



'கல்வி அமைச்சைப் பற்றிய பிரேரணைகள் சபையில் விவாதிக்கப்படும்போது, கல்விஅமைச்சர், சபையைக் கிஞ்சித்தும் மதிக்காதும் வெளியே தனது பரிவாரங்களுடன் உரையாடிக் கொண்...

...விதிக்கப்பட்ட அபராதம் தான்!

0 0 0

திரு. பிரின்ஸ் குணசேகரா (ஹபரதுவ): கல்வி அமைச்சரை இன்று வட்டுக்கோட்டை பிரதிநிதிவன்மையாகக் கண்டிக்கிருர். ஆஞல் அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தபோது ஆதரித்துப் பேசியவரும் அவர் தான். அவருக்கென்ன இரட்டை நாக்கா?

0 0 0

திரு. அமிர்தலிங்கம்: ஆள் ஒன்ருக இருக்கலாம். ஆஞல் கண்டிக்கிற காரணம் வேறு.

0 0 0

திரு. பிரின்ஸ்: (தமிழில்) இந்த ஆளுக்குத் தானே நீங்களெல்லாம் பொய் சொன்னீங்க!

0 0 0

திரு. டி. சிவசிதம்பரம்: (வவனியா) தமிழரசுக்கட்சி இப்போது அரசாங்கக்கட்சியிலிருந்து விலகிவிட்டது என்பது திரு. பிரின்ஸ் குணசேகராவுக்கு தெரியாதுபோலும்! அரசாங்கத் தரப்பில் உட்கார்ந்திருந்தாலும். அவர்கள் அரசாங்கக் கட்சியில் உள்ளவர்கள் அல்ல.

0 0 0

திரு. டி. சிவசிதம்பரம்: (வவனியா) தமிழ்ப் பாடப் புத்தகங்களின் விலையைக் குறைக்க வேண்டுமென மேல்சபையில் திரு. டொரிக்டி சூசா பிரேரணையொன்று கொண்டுவந்தபோது அப்போது மேல்சபையிலிருந்த தமிழ் உறுப்பினர்கள் அதனை ஆதரிக்காது எதிர்த்தது எனக்கு மட்டுமல்ல, தமிழ்பேசும் இனத்திற்கே விசித்திரமானதாக இருந்தது.

0 0 0

திரு. அல்பர்ட் காரியவாசம்: எவ்வளவுதான் வணங்கி, வணங்கி அரசாங்கத்தை ஆதரித்தாலும் பாடப்புத்தகங்களின் விலையைக் குறைக்கும் இந்த சர்வ சாதாரண விஷயத்தைக் கூட செய்துகொள்ள முடியாத கேவலமான நிலையில் தான். தமிழரசுக்கட்சியினர் இத்தனை காலமும் ஆட்சியாளர்களுடன் சேர்ந்திருக்கின்றனர் என்பது இப்போது பகிரங்கமாகிவிட்டது.

0 0 0

திரு. பீலிக்ஸ் டயஸ்: (தொம்பே) முன்னள் அமைச்சர் திருச்செல்வம் வடக்கு மாகாணத்திலே கிணறுகள் தோண்டுவதற்கு ஏராளமான நிதி ஒதுக்கிஞர். எத்தனை முறை குளித்து எப்படித்தான் பாவங்களைக் கழுவிஞலும் தமிழரசு வாதிகள் தமிழரசு வாதிகளாகத்தான் இருப்பார்கள்.

...டும். ஆஞல் இதில் யாரையும் கட்டாயப் படுத்துவது தான் கூடாத விஷயம்.

சென்றமுறை விற்காத டிக்கெட்டுகளுக்கான தொகையை கேக், மில்க டோபி முதலிய தின்பண்டங்களைச் செய்து மாணவர்களுக்கு விற்று அந்தப் பணத்தை பள்ளிக்கூட ஆசிரியர்கள் கட்டினராம். நிலைமை எப்படி இருக்கிறது!

இளம் மாணவர்களுக்கு நேர்மையும், நற்குணங்களையும்கற்பிக்க வேண்டியிருக்க, சூதாட்டபுத்தியை கட்டாயமாகப் போதிக்க கல்விப் பகுதி முனைந்துள்ளது விபரீதமாகும். தமிழ்ப்பகுதியில் மட்டுமல்ல, மற்ற பகுதிகளிலும் இதனல் எதிர்ப்பு அதிகரித்துள்ளதில் வியப்பில்லை. இப்படியாகப் பணம் சேர்த்து ஏன் அந்த விழாநடத்த வேண்டும்?

ஆஞல் கல்விஅமைச்சரோ ஒரு பிடிவாதக்காரராம், யார் என்ன சொன்னலும் அவர் திருந்துவாரா? என்ருலும் ஊதுகிற சங்கை ஊதுவோம். விடியும் போது விடியட்டும்!

0 0 0

நயினதீவிலிருந்து ஓர் அன்பர், திருக்கேதீஸ்வரம் திருப்பெருந்துறையல்ல என்று எழுதுகிருர் முதலியார் இராஜநாயகம், ஒரு சரித்திர ஆசிரியரே யன்றி, சமயாசாரியரல்ல வென்றும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இதை பெருந்துறை என்று குறிப்பிடவில்லை என்றும் வாதிக்கிருர்.

மாதோட்டமென்பது தான் திருப்பெருந்துறை. சிங்களத்திலே, மா என்ஞல் பெரிய, 'தொட்ட' என்ருல் துறை. மாதோட்ட நன்னகரில் கேதீஸ்வரத்தான் கோவில் கொண்டுள்ள இடமே திருக்கேதீஸ்வரம். திருஞானசம்பந்த சுவாமிகளும், சுந்தரமூர்த்திசுவாமிகளும், 'மாதோட்ட' என்ற தமிழல்லாதபெயரைப்பயன் படுத்தி இருக்கையில், மணிவாசகப் பெருந்தகை' அதைத்தூய தமிழாக்கி, 'பெருந்துறை' என்று பாடியிருப்பதாகவே, முதலியார் இராஜநாயகம்கூறியுள்ளார்.

கொழும்பில் ஒரு பெரியாரும் முதலில் இதை ஒப்பவில்லை நேரில் விளக்கியதும் மெதுவாக மனம்மாறிஞர். அறிஞர்கள் ஆராயவேண்டுமென்பதே என் கோரிக்கை.

0 0 0

கைப்போது மலர் தூவிக்
காதலித்து வானேர்கள்,
முப்போதும் முடிசாய்த்
துத் தொழநின்ற முதல்
வனை,
அப்போது மலர் தூவி
ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை
என் மனத்தே வைத்தேனே.

—அப்பர் அடிகள்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 9-ம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org